AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 02 பெப்ரவரி - 2016 www.aharam.lk




## "வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தேன்"

-வர்த்தக பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற ஆகில் முஹம்மத்-



## "தொடரான முயற்சியும் பயிற்சியும் வெற்றிக்கான முதலீடுகள்"

விஞ்ஞான பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற முஹம்மத் முன்சிப்



## "சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உறுதியாக இருக்க வேண்டும்"

-பொறியியல் தொழிநுட்ப பிரிவில் தேசிய மட்டத்தில் ஐந்தாம் இடம்பெற்ற முஹம்மத் அகீல்-

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68 ஆவது சுதந்திர தினம்

1948.02.04 - 2016.02.04

## இலங்கை தேசியத்தின் முதன்மை பதிவுகள்...



**தேசிய கொடி**

சிங்களவர் - சிங்கத்தை சூழவுள்ள காவி நிறம்
தமிழர் - செம்மஞ்சள்
முஸ்லிம்கள் - பச்சை



**தேசிய சின்னம்**

(1972 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. வடிவமைத்தவர் எஸ்.எம். செனவிரத்ன)



**தேசிய மரம்**

நாக மரம்
ஆங்கிலத்தில்: Iron Wood Tree
(1986 இல் தெரிவு செய்யப்பட்டது)



**தேசிய விளையாட்டு**

கரப்பந்தாட்டம்
(1991 இல் தெரிவு செய்யப்பட்டது)



**தேசிய மலர்**

நீலோற்பலம்
(1986 இல் தெரிவு செய்யப்பட்டது)
ஆங்கிலத்தில்: Water Lilly
தாவரவியற் பெயர்: Nymphae stellate



**தேசிய மிருகம்**

மர அணில்



**தேசிய பறவை**

காட்டுக்கோழி
குடும்பவியற் பெயர்: Gallus Lafayetti




**தேசிய இரத்தினக்கல்**

நீல இரத்தினம்



**முதலாவது பிரதமர்**

டி.எஸ்.சேனநாயக்க
(1947-1952)



**நிறைவேற்று அதிகாரமுடைய முதலாவது ஜனாதிபதி**

ஜே.ஆர். ஜயவர்தன
(1978-1988)



**முதலாவது ஜனாதிபதி**

வில்லியம் கொபல்லாவ
(1972-1978)




**முதலாவது முஸ்லிம் அமைச்சர்**

டி.பி. ஜாயா
(தொழில் அமைச்சர்)




**6 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி**

மைத்திரிபால சிறிசேன
09.01.2015 முதல்



**22 ஆவது பிரதமர்**

ரணில் விக்கிரமசிங்க
09.01.2015



**தற்போதைய சபாநாயகர்**


கரு ஜயசூரிய
(15 ஆவது)

**தேசிய கீதம்**

( இயற்றியவர்: ஆனந்த சமரகோன் (1940) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் C.W.W கன்னங்கரா, தமிழில் புலவர் மணி நல்ல தம்பிப்பிள்ளை) முதன் முதலில் பாடப்பட்டது 1952 இல் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



நாம் வாழும் பூமிப் பந்தின் பெரும் பகுதியை
ஆட்கொண்டிருப்பது கடல்தான்.
கடற்கரைகளும் கடலின் மேற்பரப்பும்
அதன் சில மீற்றர்கள் வரையான அடிப்பகுதியும்
பார்ப்பதற்கு அழகாக வனப்புடன் காட்சி
தந்தாலும் இன்னும் கீழே செல்லச்
செல்ல ஆழ்கடல் பயங்கரமானதாகவும்
சுவாரஷ்யமானதாகவும் இருக்கும்.

38




22





32

30




AHARAM அகரம்

எண்: 10 - பெப்ரவரி : 2016 - எழுத்து: 02






பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

பொறுப்பாசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

துணை ஆசிரியர்
எஸ். ஸஹீர் அப்பாஸ் (இர்பானி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


**பாடத்திட்டம்**


| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அறபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : editor@aharam.lk


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப்பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# நாட்டுக்காக பிரார்த்திக்கும் உள்ளங்கள் வேண்டும்

இலங்கை தேசம் 1948 ஆம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து இவ்வருடம் பெப்ரவரி 04 ஆம் திகதி தனது 68 ஆவது சுதந்திர தினத்தினை நாடளாவிய ரீதியில் நினைவு கூர்ந்தது. வரலாற்று ஓட்டத்தில் 450 வருட காலங்கள் ஐரோப்பிய நாடுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா என்பவற்றின் காலனித்துவ தேசமாக இலங்கை இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு மேற்கு நாடும் இலங்கையை தன்னகப்படுத்திக் கொள்வதற்கு இலங்கையின் கேந்திர அமைவிடம், கப்பல் போக்குவரத்திற்கு வாய்ப்பான ஒழுங்கமைப்பு, இயற்கையான துறைமுகங்கள், பெறுமதியான இயற்கை வளங்கள் என்பன பிரதான காரணங்களாக சொல்லப்படுகின்றன. இதன் பின்னணியில்தான் மேற்கு தேசங்கள் இலங்கையை ஆக்கிரமிப்பதற்கு முண்டியடித்தார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

இவ்வாக்கிரமிப்புக்கு எதிராக உள்நாட்டு சிங்கள மன்னர்களுடன் இணைந்து முஸ்லிம்கள் தங்களுடைய காத்திரமான பங்களிப்புகளையும் நாட்டிற்கான விசுவாசத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இதனை வரலாற்று ஆய்வாளர்களின் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக, இலங்கையின் வரலாறு தொடர்பாக எழுதப்பட்ட நூல்களில் லோனா தேவராஜாவின் 'சிறீ லங்காவே முஸ்லிம்வரு' (இலங்கையின் முஸ்லிம்கள்) என்ற நூல் இலங்கை வாழ் முஸ்லிம்களின் நாட்டுப் பற்று, அவர்களது தேசிய பங்களிப்புகள் தொடர்பாக அதிகம் பேசுகிறது. விசேடமாக சிங்கள மன்னர்களின் மிக நெருங்கிய நண்பர்களாக மட்டுமின்றி, அரசர்களின் உத்தியோகபூர்வ வைத்தியர்கள், அந்தரங்கச் செயலாளர்கள், தமது இரகசியங்களைப் பாதுகாப்பவர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் என்று பல்பரிமாணங்களில் காத்திரமான பங்களிப்புகளை முஸ்லிம்கள் வழங்கியிருப்பதாக அந்நூலில் ஆசிரியர் குறித்துள்ளார்.

முதலாம் புவனேகுபாகுவின் ஆட்சிக் காலத்தில் எகிப்து நாட்டுடனான வர்த்தக உறவுகளை பலப்படுத்தும் நோக்குடன் அபூ உஸ்மான் என்ற முஸ்லிம் ஆளுமையை மன்னன் நம்பிக்கைக்குரிய தூதுவராக அந்த தேசத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறான். அவ்வாறே, ஆங்கிலேய பிரதானியான ஜோன் பைபஸ் என்பவர் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்திறங்கியபோது அவரை அழைத்து வருவதற்கான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இராஜதந்திர தூதுவராக உஸ்மான் லெப்பை என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். தவிரவும், இரண்டாம் இராஜசிங்க மன்னன் காலத்தில் பிரபலமான அரச மருத்துவராக சுல்தான் என்பவரும் கடமையாற்றியிருக்கிறார்.

இவ்வாறாக, வரலாற்றில் நிறைவான பதிவுகளை நாம் அதிகம் கண்டு கொள்ளலாம். அதிலும் விசேடமாக நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்படும் வகையில் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் நடந்தபோது முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களுக்கு தோள் கொடுத்தார்கள் என்பதும் நிரூபணமே. இதனை லோனா தேவராஜா தன்னுடைய வரலாற்று ஆய்வு நூலில் பின்வருமாறு அடையாளப்படுத்துகிறார்: ''முஸ்லிம்களிடம் இருந்த நம்பிக்கை, நாணயம், நாட்டுக்காக ஆற்றிய பங்களிப்புகள் போன்ற இறுக்கமான தொடர்புகளினால் பல பிக்குகள், மன்னர்கள் தமது விகாரைக்குச் சொந்தமான பல பூமிகளை பள்ளிவாசல்கள் அமைக்கவும் கொடையாக வழங்கியுள்ளமை முஸ்லிம்களின் நாட்டுப் பற்றையும் விசுவாத்தினையும் வெளிப்படுத்துவதற்கான சான்றுகளாகும்.''

எனவே, மாணவர்களாகிய நாமும் சுதந்திர தின நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் இன்றைய நாட்களில் மாத்திரமல்லாது, எப்போதும் எமது தேசத்தின் மீது பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும். நாட்டிற்கான சிறந்த பிரஜையாக உருவாவதுடன் நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்புகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். பாடசாலை பருவங்களில் எமது கல்வி நடவடிக்கைகளை ஆரோக்கியமாக மேற்கொண்டு எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவையான சிறந்த மனித வளங்களாக நாம் மிளிர வேண்டியது கட்டாயமானதாகும்.

அவ்வாறே, எமது நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்வதுடன் எமது முன்னோரின் நாட்டிற்கான பங்களிப்புகளை ஆதாரபூர்வமாக தெரிந்து கொள்வதும் எமது எதிர்காலத்தை பலப்படுத்துவதற்கு இன்றியமையாத விடயமாகும். அதேபோன்று, நாட்டிலுள்ள அனைத்து இன, மத சமூகங்களுடனும் ஒற்றுமையுடன் ஒன்றாக வாழ்வதற்கான மனோநிலைகளை உருவாக்கிக் கொள்வதுடன் எப்போதும் நாட்டின் பாதுகாப்பு, வளர்ச்சி என்பவற்றுக்கு இறைவனை பிரார்த்திக்கும் உள்ளங்களாக எமது உள்ளங்களை நாம் மாற்ற வேண்டும். இதுவே எமது நாட்டிற்கு நாம் செய்யும் உயர்ந்த பங்களிப்பாக இருக்கும், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

عَنْ أَنَس بْنَ مَالك يَقُولُ: قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَيْسَ مِنَّا مَنْ لَمْ يَرْحَمْ صَغِيرَنَا وَيُوَقِّرْ كَبِيرَنَا ( الترمذي)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சிறுவர்களுக்கு கருணை காட்டாதவரும் பெரியோரைக் கண்ணியப்படுத்தாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல." (திர்மிதி)

மேற்படி ஹதீஸ் மிக முக்கியமான இரண்டு விடயங்களை எமக்கு உணர்த்தி நிற்பதைக் காணலாம். அவைதான் சிறுவர்களுக்கு இரக்கம் காட்டுவதும் பெரியோருக்கு மரியாதை செலுத்துவதுமாகும்.

சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் இடையில் பலமான ஓர் உறவுப் பாலத்தை கட்டியெழுப்புவதாக அமைந்து காணப்படுகின்ற இந்த ஹதீஸின் இரண்டாவது விடயத்தையே இங்கு நாம் நோக்க இருக்கின்றோம்.

ஒரு மனிதன் தனது தாயின் வயிற்றில் கருவுற்றது முதல் அவன் மரணத்தைத் தழுவும் வரை பல பராயங்களைச் சந்திக்கின்றான். சிசு, குழந்தை, சிறுவன், இளைஞன், வாலிபன் மற்றும் வயோதிபன் என அப்பருவங்களை நாம் அடையாளப்படுத்துகின்றோம்.

இப்பருவங்களில் வயோதிபப் பருவம் என்பது மிக முக்கியமான ஒன்றாகவும் பிறரால் அது மதிக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் காணப்படுவதுடன் இஸ்லாமும் அதற்கு மதிப்பளிக்குமாறு ஏவுகின்றது.

எந்தளவுக்கெனில், ஒரு முஸ்லிம் தான் நபியவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவன் என்பதற்கான அடையாளங்களில் ஒன்றாக முதியவர்களுக்கு மரியாதை செய்வது உள்ளது. இல்லாவிட்டால் அவன் தன்னை ஒரு முஸ்லிம் என்று சொல்வதற்கே தகுதியற்றவன் என்பதை விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸின் ஊடாக காண்கின்றோம்.

இத்தகைய முதியவர்கள் எமது பெற்றோராக, உறவினர்களாக, எமது பெற்றோரின் நண்பர்களாக அல்லது எமக்கு கற்றுத் தருகின்ற ஆசிரியர்களாக இருக்கலாம். இன்று நாம் நாளாந்தம் அதிகமான முதியவர்களுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்கின்றோம் என்பதை ஒரு கணம் சிந்தித்துக் கொள்வோம்.

மூத்தவர்களை முந்திக் கொண்டு பேசுவது, செயற்படுவது, அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளியாமை போன்றன மரியாதையற்ற செயற்பாடுகளாக கணிக்கப்படுகின்றன. அத்தோடு, அவர்களின் அறிவு, அனுபவங்களை கவனத்திற் கொண்டு அவற்றின் மூலம் சிறுவர்களாகிய நாம் பயன் பெற வேண்டும்.

ஒரு தடவை தன்னுடன் இருந்த தோழர்களிடம் நபியவர்கள் ஒரு மரம் பற்றி வினா எழுப்பினார்கள். தோழர்களிடமிருந்து விடை ஏதும் கிடைக்கவில்லை. அப்போது பேரீச்சம் பழம் என நபியவர்களே பதில் சொன்னார்கள்.

அச்சபையில் இருந்த அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சபை கலைந்த பின் தனது தந்தையைப் பார்த்து, அந்த விடை எனக்கும் தெரிந்திருந்தது. எனினும், அச்சபையில் இருந்தவர்களை விட இளையவனாக நான் இருந்ததால் பதிலளிக்கவில்லை என்று கூறினார்கள்.

அதேபோன்று, மக்கா வெற்றியின்போது அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் வயது முதிர்ந்த தந்தை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பார்க்க ஆசைப்பட்டார்கள். அந்த ஆசையை நிறைவேற்ற அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் தன் தந்தையை நபியவர்களைச் சந்திக்க தூக்கிக் கொண்டு சென்றார்கள். இதனைக் கண்ட நபியவர்கள், ''அபூபக்ரே! நீங்கள் சொல்லியிருந்தால் உங்கள் தந்தையை பார்க்க நானே வந்திருப்பேன்'' என்றார்கள்.

இப்படி, நபியவர்களும் ஸஹாபாக்களும் முதியோரை மதிக்கின்ற, அவர்களுக்கு மரியாதை கொடுக்கின்ற விடயத்தில் மிகவும் கண்டிப்புடன் இருந்துள்ளார்கள்.

எனவே, சிறுவர்களாகிய நாம் வீட்டுச் சூழலிலும் பாடசாலைச் சூழலிலும் அதேபோன்று நாம் நாளாந்தம் எதிர்கொள்கின்ற அனைத்துச் சூழலிலும் எம்மை விட முதியவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் ஊடாக நபிகளாரின் அன்பைப் பெற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்



# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதப் புனிதர்கள்


## ஹிழ்ர்

அல்லாஹ்வின் அருளினால் மிகப் பெரும் ஞானம் வழங்கப்பட்டவராக ஹிழ்ர் விளங்கினார் என அல்குர்ஆன் விவரிக்கிறது. பல கடல்களைத் தாண்டி அல்கித்ர் என்பவரை சந்தித்து அவரிடமிருந்து அறிவைப் பெற்றுக் கொள்ளுமாறு மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வினால் பணிக்கப்பட்டார்கள்.



## லுக்மான்

லுக்மான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது மகனுக்கு வழங்கிய அறிவுரைகளை அல்குர்ஆன் எமக்கு எடுத்துரைக்கிறது. அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டும் என்றும், பெற்றோருடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், இறைவனைத் துதிக்க வேண்டும் என்றும், நல்லவற்றை ஏவி தீயவற்றைத் தடுக்க வேண்டும் என்றும், பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், பூமியில் பெருமையுடனும் ஆணவத்துடனும் நடந்து கொள்ளக் கூடாது என்றும், பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தனது மகனுக்கு அறிவுரை கூறினார். அல்லாஹ் எமது படிப்பினைக்காகவே அவரது அறிவுரைகளை எமக்கு அருளியுள்ளான்.



## மர்யம்

ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தாயான மர்யம் அவர்களை விசுவாசிகளுக்கு முன்னுதாரணமாக அல்குர்ஆன் பல இடங்களில் புகழ்ந்து பேசுகிறது. அவர்களது வரலாற்றை ஸூரா மர்யம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆண் துணையின்றி நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை மர்யம் ஈன்றெடுத்தபோது அவரது சமூகத்தினரால் அவர் இழிவாகப் பேசப்பட்டார். எனினும், மர்யம் அவர்களை அல்குர்ஆன் உண்மையாளர் (சித்தீக்கா) என விளிப்பதன் மூலம் அவரது கற்பின் புனிதத் தன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஆஷியா


தன்னைத் தானே கடவுள் என்று பறைசாற்றிக் கொண்ட பிர்அவ்ன் என்பவனின் மனைவியே ஆஷியா ஆவார். எனினும், இவர் தனது கணவனின் கொள்கைக்குப் புறம்பாக அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி இறை விசுவாசியாக திகழ்ந்தார் என அல்குர்ஆன் சிலாகிக்கிறது. ஆஷியா தனது கணவனின் பாவங்களை மன்னிக்குமாறும் தனக்கு சுவனத்தில் உயர்ந்த இடத்தை அருளுமாறும் பிரார்த்தித்து வந்தார். மிகவும் இளகிய குணமும் இரக்க சிந்தையும் கொண்ட ஆஷியா நைல் நதியோரத்தில் கைக்குழந்தையை (மூஸா) தாங்கி வந்த பேழையை கைப்பற்றினார். அக்குழந்தைக்கு எவ்வித தீங்கும் இழைக்கக் கூடாதென தனது கணவன் பிர்அவ்னிடம் இறைஞ்சினார். அக்குழந்தையை தனது சொந்தக் குழந்தை போலக் கருதி வளர்த்தார்.



## ஸபா நாட்டு அரசி

ஸபா நாட்டின் அரசி பல்கீஸ் மற்றும் அவரது நாட்டு மக்கள் சூரியனை வழிபட்டு வந்தனர். இது தொடர்பாக சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அறிந்து கொண்டதும் இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்து அரசி பல்கீஸுக்கு சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) ஒரு கடிதம் எழுதினார்கள். சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடன் முரண்பட்டுக் கொள்ள விரும்பாத அரசி பல்கீஸ் பரிசுப் பொருட்களை அனுப்பி வைத்தார். சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அப்பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்ள மறுத்ததும் அரசி பல்கீஸ் இஸ்லாம் பற்றிய அவரது அழைப்பின் புனிதத்துவத்தை அறிந்து கொண்டார். அதன் பின்னர் அரசி பல்கீஸ் தனது நாட்டு மக்களுடன் சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நேரில் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.





## விசுவாசிகளின் அன்னையர்

இறைத் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மனைவியரை அல்குர்ஆன் ‘விசுவாசிகளின் அன்னையர்’ என கண்ணியப்படுத்துகிறது. இவர்கள் இறைத் தூதரின் போராட்ட வாழ்வில் பங்கெடுத்து உறுதுணையாக விளங்கினர்; தூய்மையான கற்பொழுக்க நெறியைப் பேணி அனைத்துப் பெண்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தனர். நபியவர்களின் முதல் மனைவியும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் பெண்மணியுமான அன்னை கதீஜா தூதுத்துவத்தின்போது கலங்கிய நபியவர்களுக்கு ஆறுதல் கூறினார். நபியவர்கள் துன்புறுத்தப்பட்டபோது கலங்காது காத்து வந்தார். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகளும் இறைத் தூதரின் இன்னோர் அருமை மனைவியுமான ஆயிஷா அவர்கள் அறிவில் மிகச் சிறந்து விளங்கினார். பெருந்தொகையான ஹதீஸ்களை மனனமிட்டு அறிவித்தவர்களில் அன்னை ஆயிஷா முக்கியமானவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com



# இருள் சூழ்ந்துள்ள ஆழ்கடல்

நாம் வாழும் பூமிப் பந்தின் பெரும் பகுதியை ஆட்கொண் டிருப்பது கடல்தான். கடற் கரைகளும் கடலின் மேற்பரப்பும் அதன் சில மீற்றர்கள் வரையான அடிப்பகுதியும் பார்ப்பதற்கு அழகாக வனப்புடன் காட்சி தந்தாலும் இன்னும் கீழே செல் லச் செல்ல ஆழ்கடல் பயங்கரமானதாகவும் சுவாரஷ்யமான தாகவும் இருக்கும். இத்தொடரில் இருள் சூழ்ந்துள்ள ஆழ்கட லின் இரகசியங்களை அலசுவோம்.

**ஆழ்கடலின் இருள்கள்**

ஆழ்கடலின் இருள் எப்படியிருக்கும் என்பதை இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களின் உதவியுடன் விஞ் ஞானிகள் கண்டறிய 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே, வியத் தகு விதத்தில் அல்குர்ஆன். கூறியிருப்பதை ஒரு முறை படித் துப் பாருங்கள்.

''...அல்லது ஆழ் கடலில் உள்ள பல இருள்களைப் போன் றது. ஓர் அலை அதை மூடுகிறது. அதற்கு மேலே மற்றோர் அலை. அதன் மேலே மேகம். ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல இருள் கள். அவன் தனது கையை வெளிப்படுத்தும்போது அதைக் கூட அவனால் பார்க்க முடியாது இறைவன் யாருக்கு ஒளியை ஏற்படுத்தவில்லையோ அவனுக்கு எந்த ஒளியும் இல்லை.''

*(24:40)*

இங்கு ஆழ்கடலில் இருக்கும் அடர் இருளைப் பற்றி இவ் வசனம் பேசுகின்றது. சூரியனிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் கடலின் மேற்பரப்பில் பரவுகின்றன. ஒளிக் கற்றைகளின் ஏழு வண்ணங்களும் கடலின் மேற்பரப்பில் படிந்தாலும் அதிலுள்ள நீல நிறத்தைத் தவிர மற்ற வண்ணங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக 1000 மீற்றர் ஆழம் வரை உறிஞ்சப்படுகின்றன.


மேல் அடுக்கிலுள்ள சிவப்பு நிறம் 10 மீற்றருக்குள் உறிஞ்சப்படுகிறது. பின்னர் 50 மீற்றர் ஆழத்தில் மஞ்சள் கதிர்கள் உறிஞ் சப்படுகின்றன. 100 மீற்றர் ஆழத்தில் பச்சை நிறக் கதிர்கள் உறிஞ்சப்படுகின்றன. 200 மீற்றர் ஆழம் சென்றவுடன் நீல நிறக் கதிர் களும் மறைய ஆரம்பிக்கின்றன. இறுதியில் எஞ்சுவது ஊதா நிறமாகையால் அதிலி ருந்து 1000 மீற்றர் ஆழம் வரையுள்ள பகுதி நமது கண்களுக்கு சற்று கருமையாகவே தோன்றும். அதற்கும் கீழே செல்லச் செல்ல நிறங்கள் யாவும் மறைந்து இருள் வெளி கள் சூழ ஆரம்பித்து விடுகின்றன. கடும் இருட்டாகத்தான் இருக்கும். உங்கள் கைகளை நீங்கள் பார்க்க நினைத்தாலும் உணரத்தான் முடியுமே ஒழிய, கண்களால் பார்க்க முடி யாது. இதனைத்தான் மேற்கண்ட அல்குர் ஆனிய வசனம் கூறியது.

**ஆழ்கடலின் அலைகள்**

''கடலின் மேற்பரப்பில் மட்டுமல்லாது ஆழ்கடலிலும் அலைகள் இருப்பதாக மேற் கூறிய வசனத்திலிருந்து விளங்கிக் கொள்ள லாம். ஓர் அலை அதை மூடுகிறது. அதற்கு மேலே மற்றோர் அலை.'' *(24:40)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த அல்குர்ஆன் வசனத்தின் நிதர்ச னத்தை அண்மையில்தான் விஞ்ஞானம் கண்டு கொண்டது. கடலில் அலைகள் மேற் பரப்பில் மட்டுமன்றி அதன் அடிப் பகுதி களிலும் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கண்டு கொண்டனர். இங்கு ஏற்படும் அலை களின் கீழ்மட்ட நீரின் அடர்த்தியும் மேல் மட்ட நீரின் அடர்த்தியும் நிறமும் சுவையும் வேறுபடுவதாகவும் அவர்கள் கூறுகின்ற னர். கீழுள்ள படத்தில் கடல் நீரின் இரண்டு அடுக்குகளுக்கு இடையிலுள்ள அலைகளைக் காணலாம். கீழ் அடுக்கு மேல் அடுக்கை விட அடர்த்தி அதிகமாக உள்ளதை அவ தானிக்க முடியும்.

வினாடிக்கு 300,000 கிலோ மீற்றராக உள்ள ஒளியின் வேகம் கடல் நீருக்கு அடி யில் 225,000 கிலோ மீற்றராகக் குறைவதற் குக் காரணம் இந்த அலைகள்தான் எனவும் கடல் மட்டத்திலிருந்து 1000 மீற்றர் வரை கூட சூரிய ஒளியால் ஊடுருவிச் செல்ல முடி யவில்லை. 200 மீற்றர் ஆழத்தில் வைத்தே ஒளி சன்னம் சன்னமாக குறைந்து முடிவில் ஒளியே இல்லாமல் போகக் காரணமும் தண்ணீரின் மேல்மட்ட கீழ்மட்ட அடர்த்தி யும் அதற்கு மேல் அடுக்கடுக்காக மோதும் அலைகளும்தான் என விஞ்ஞானிகள் கூறு கின்றனர். இவை யாவும் சமீப காலக் கண்டு பிடிப்புகள்தான். திருமறையோ 1400 ஆண் டுகள் பழமை வாய்ந்தது.


### ஆழ்கடலின் மலைகள்



நிலத்தில் போன்றே கடலுக்கு அடியிலும் பிரம்மாண்ட மான மலைகள் காணப்படுகின்றன. மலைகள் மட்டுமன்றி கனவாய்கள், குகைகள், சுரங்கங்கள், பள்ளத்தாக்குகள் எனப் பல மர்மப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. உலகின் முப் பது நாடுகள் ஒன்று சேர்ந்து கடலின் அந்தரங்கத்தை அறிய 1955 இல் ஒரு கூட்டமைப்பை உருவாக்கின. 1970 ஆம் ஆண்டு வரை கிடைத்த ஆய்வுத் தகவல்களைக் கொண்டு கடலின் தரைப் பகுதி வரைபடமாக உருவாக்கப்பட்டது. இதில் மனி தன் கண்டறியாத பகுதிகள் இன்னும் பல உள்ளன என்பது தான் உண்மை.

### ஆழ்கடலின் உயிரினங்கள்

கடலின் சூரிய ஒளி ஊடுருவும் பகுதிக்குக் கீழே வாழும் உயிரினங்கள் ஆழ்கடல் உயிரினங்கள் (Deep sea creatures) என அழைக்கப்படுகின்றன. மனிதன் உயிர் வாழவே முடி யாத இத்தகைய சூழ்நிலையில் சில அபூர்வ உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் சிலதைத்தான் மனிதன் இது வரை ஆராய்ந்துள்ளான். இன்னும் ஆராயப்படாத, கண்டே யிராத, பார்க்கப் பயங்கரமான உருவங்களுடன் ஏராளமான உயிரினங்கள் இருக்கலாம் என்பதே விஞ்ஞானிகளின் நம் பிக்கை.




பெரிய கண்களுடனும் பெரிய வாயுடனும் நீண்ட உணர் கொம்புகளுடனும் கூம்பு போன்ற அமைப்பிலும் மற்றும் அதிக உணர்திறன் கொண்டவையாகவும் இவ்வுயிர்கள் இருக் கின்றன. இவற்றில் அதிகமானவை பயோலுமினிசென்ட் (Bioluminescence) அமைப்பைக் கொண்டவையாகும். அதா வது, இவை இருளில் இருப்பதால் சுயமாக ஒளியை தமது உடலிலிருந்து ஒளிரச் செய்யும் சக்தி இவற்றுக்கு உண்டு. ஒளிர்தல் (Bioluminescence) என்பது வேதியியல் தாக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஒளியை உருவாக்கக் கூடிய திறனாகும். அதாவது, தாங்கள் செல்லும் பாதையின் வெளிச்சத்திற்காகவும் இரையை ஈர்க்கவும் மற்றும் தன் துணையை ஈர்க்கவும் எனப் பல வழிகளில் இந்த ஒளியை இவை உருவாக்கிப் பயன்படுத்துகின்றன.

இந்த ஒளியின் காரணமாக சில உயிரினங்கள் வைப்பர் மீன் (Viper fish), பிரகாச ஒளி மீன் (flashlight fish) எனப் பெயரிடப்பட்டுள்ளன. மேலும், ஒளிர்தலின் மூலம் எதிரிகளைக் குழப்பி அவற்றின் போக்கினை மாற்றவும் இவற்றால் முடிகிறது. இந்த ஒளிர்தலுக்குத் தேவையான ஒளியை உருவாக்குகின்ற இரசாயன செயல்முறையில் முக்கிய இரண்டு இரசாயனங்கள் பயன்படுகின்றன.அந்த இரசாயனத்திற்கு லூசிஃபெரின் (luciferin) என்று பெயர். இந்த இரசாயன செயல்முறைக்கு லூசிஃபெரஸ் (luciferase) என்று பெயர். இவை மின்னும் வடிவிலும் ஒளி ஊடுருவக் கூடிய உடலமைப்பையும் கொண்டுள்ளன.

இதில் சில வகை உயிரினங்கள் பார்வைச் சக்தியையும் தாண்டி உணர்ச்சித் திறன் கொண்ட பெரிய உணர்வுக் கொம்புகளைக் கொண்டுள்ளன. மேலும் சில உயிரினங்கள் தனது துணை உயிரினம் வெளியிடும் இரசாயன வாசனையைக் கண்டறிய வலுவான உணர்திறனைப் பெற்றுள்ளன. மேலும் பல மாதங்கள் கூட உணவு இல்லாமல் வாழ்கின்றன.

இவற்றின் பெரும்பாலான உணவு கடலின் மேல் பகுதியில் இருந்து விழும் பொருட்களாலும் அல்லது கடலில் வாழும் உயிரினங்கள் இறந்து அடிமட்டத்தில் அமிழும்போதும் கிடைக்கிறது. அத்தோடு, கடலுக்கு அடியிலிருக்கும் பற்றீரியாக்களையும் நுண்ணுயிரிகளையும் உண்டு உயிர் வாழ்கின்றன.

கடலின் மேல் மட்டத்தை விட பல நூறு மடங்கு அழுத்தமான நீர்ப் பகுதியில், மிகக் குறைந்த அளவு ஒட்சிஸன், மிகச் சிறிய உணவுகள், கடுமையான இருட்டு, அதீதக் குளிர் என கடினமான நிலைமைகளிலும் இவை வாழ்ந்து வருகின்றன. வேறு எந்த ஜீவராசிகளாலும் வாழ முடியாத இந்த சூழலிலும் வாழும் விதத்தில் அல்லாஹ் இவ்வுயிர்களைப் படைத்துள்ளான். இந்தப் பிரதேசத்திலிருந்து மேற்பகுதிக்கு வந்து இவற்றால் வாழவும் முடியாது. இந்தச் சூழலில் வாழும் வண்ணம் பெரும்பாலும் மீன்கள் 25 செ.மீ. நீளத்திலும் வழுவழுப்பான சதையையும் குறைந்த பட்ச எலும்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.

**ஆழ்கடல் ஆராய்ச்சிகள்**

அரபு மொழியில் கடல் 'பஹ்ருன்' என அழைக்கப்படுகிறது. அல்குர்ஆனில் கடல் சம்பந்தமாக 41 இடங்களில் வந்துள்ளன. இத்துனை தடவைகள் திரும்பத் திரும்பக் கூறியிருப்பது அதன் அற்புதங்களையும் அத்தாட்சிகளையும் மனிதன் ஆராய வேண்டும் என்பதற்காகத்தான்; ஓதிவிட்டு மூடிவைப்பதற்கு மட்டுமல்ல.

ஆழ்கடல் ஆராய்ச்சிகள் விண்வெளி ஆராய்ச்சிகளை விட சிரமமானது என்பதே விஞ்ஞானிகளின் கருத்து. அதனால்தான் ரஷ்ய ஸ்புட்னிக் விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின்புதான் ஆழ்கடல் ஆராய்ச்சிக்காக நீர்மூழ்கி ஓடம் அனுப்பப்பட்டது. எப்படியோ இன்றைய விஞ்ஞான தொழில்நுட்பங்களின் உதவியுடன் மனிதன் கடலின் ஆழ, அகலங்களையும் அதன் தன்மையையும் வெகு சுலபமாகக் கண்டு பிடித்துள்ளான். ஒட்சிஸன் சிலிண்டர்களையும் நீர்மூழ்கி ஓடங்களையும் பயன்படுத்தி பல நாட்கள் கடலுக்கடியில் ஆராய்ச்சி செய்துள்ளான். ஆளில்லா நீர்மூழ்கி சாதனங்களில் கேமராக்களைப் பொருத்தி கடலின் தன்மைகளை, அடர்த்தியை அறிந்து கொண்டுள்ளான். இத்தனை வசதி வாய்ப்புகளும் விஞ்ஞானிகளுக்கு கிடைத்த பிறகுதான் கடலின் ஆழத்தில் ஏற்படும் மாற்றங்களை தற்காலங்களில் கண்டறிய முடிந்தது. ஆராய்ச்சியாளர்கள் ஆழமான கடற் தரையில் இரண்டு சதவீதத்திற்கும் குறைவான உயிரினங்களை மட்டுமே ஆராய்ந்துள்ளதாகக் கூறுகின்றனர். இன்றளவும் ஒவ்வொரு புதிய ஆராய்ச்சியின் போதும் பல புதிய இனங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் லிண்ட்பெர்க் என்பவரும், இராபர்ட் ஸ்டெனுயிட் என்பவரும்தான் 432 அடி ஆழத்தில் 49 மணி நேரம் தங்கிச் சாதனை ஏற்படுத்தினர். கடலடியில் அமைக்கப்பட்ட உலோகக் கூடாரம் ஒன்றில் தங்கி, அவ்வப்போது சுவாசக் கருவியுடன் வெளியே வந்து நீரில் நடமாடினர். 1960 ஆம் ஆண்டில் டொன் வொல்ஷ் மற்றும் ஜேக்கஸ் பிக்காட் ஆகிய இருவரும் 10975 மீற்றர் ஆழம் வரை சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதன் பின்னர் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஹொலிவுட் திரைப்பட இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன் 10898 மீற்றர் ஆழம் வரை சென்று வந்தார். இவ்வாறு, ஆழ் கடலின் மர்மங்களைத் துலங்க வைக்கும் நோக்கில் ஆழ் கடல் ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆழ்கடல் பற்றிய ஆய்வுகளில் இதுவரை மனிதன் கண்டறிந்துள்ளவை அற்பமானவையே. இந்த மறைவான உலகின் முழு மொத்த அறிவும் அல்லாஹ்விடமே இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

''அவனிடமே மறைவானவற்றின் சாவிகள் இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். மேலும் கரையிலும் கடலிலும் உள்ளவற்றை எல்லாம் அவன் அறிவான்.'' *(6:59)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்**

# நீதி

எம்.ஏ. ரஹ்மான்

நூறு போர்களின் ஒப்பற்ற வீரரான கலீபா அலி (ரழியல்லாஹு அன்ஹு) முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் உயர் தலைவராக விளங்கினார். ஆனால், அவருடைய கவசம் திருட்டுப் போய்விட்டது. இத்தகைய ஓர் அறிவற்ற குற்றத்தை யார் செய்திருக்கலாம் என்று எல்லோரும் அதிசயப்பட்டார்கள். கடைசியாக அந்தக் கவசம் ஒரு யூதனிடமே காணப்பட்டது. அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கவசத்தைத் திருப்பித் தரும்படி கேட்டார்.

''இது என்னுடைய கவசம்; இதனை நானே வைத்திருப்பேன்'' என வெடுக்கென்று யூதன் பதிலளித்தான்.

அந்த யூதனின் துடுக்கான பதிலைக் கேட்டு கலீபாவின் தோழர்கள் கொதித்தார்கள். ''இந்த மூடன் சிங்கத்திற்கு அல்லவா சினமூட்டுகின்றான்?'' என்று நினைத்துக் கொண்டார்கள்.

அலி சிங்கமாயினும், அவர் அல்லாஹ்வின் சிங்கம். எனவே, அவர் தோழர்களைப் பார்த்து, ''நீங்கள் என்னுடைய அந்தஸ்தினை நினைத்துப் பார்க்கக் கூடாது. சட்டத்தின் கண்களிலே அரசனும் அவனுடைய பிரஜைகளும் சமமே. தேவை ஏற்படின் கலீபா நீதிமன்றத்தின் பாதுகாப்பினை நாடுதல் வேண்டும்'' என்றார்.

அலியினுடைய தலைநகர் கூபாவாகும். புகழ்பூத்த நீதிபதி ஷாரிஹ் அவர்களே கூபா நகரின் நீதிபதியாக விளங்கினார். அவரை அந்தப் பதவியில் அலியே நியமித்திருந்தார். அலி ஷாரிஹின் நீதிமன்றத் துணையினை நாடினார்.

நீதிமன்றத்திலே ஆஜராகும்படி அந்த யூதன் அழைக்கப்பட்டான். நீதிமன்றத்திலே பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தார்கள். விசாரணை ஆரம்பமாயிற்று. நீதிபதி தமது ஆசனத்தில் அமர்ந்தார். அலி கூட்டத்தின் நடுவே சென்று நீதிபதிக்கு உரிய முறையிலே மரியாதை செலுத்தினார். ஆனால், நீதிபதி தன் ஆசனத்திலிருந்து எழவோ, கலீபாவுக்கு மரியாதை செலுத்தவோ இல்லை.

நீதிபதி : ''நீ அலியினுடைய கவசத்தைக் திருடினாயா?''

யூதன் : ''இல்லை. எனக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டு கொண்டு வரப்பட்டுள்ளது. கவசம் என்னுடையது. அது என்னிடமே இருக்கின்றது.''

நீதிபதி : ''(அலியைப் பார்த்து) கவசம் உம்முடையது என்பதை நிரூபிப்பதற்குச் சாட்சி இருக்கிறதா?''

அலி : ''ஆம்; என் மகன் ஹஸனும் என் பணியாள் குயம்பரும் என் சாட்சிகள்.''

நீதிபதி : ''அவர்களுடைய சாட்சியத்தில் என்னால் நம்பிக்கை வைக்க முடியாது.''

அலி : ''ஏன்? அவர்கள் பொய்ச்சாட்சி கூறுவார்களென நீங்கள் கருதுகின்றீர்களா?''

நீதிபதி : ''ஒருபோதும் இல்லை. நீர் இறைத்தூதரின் நெருங்கிய உறவினர் என்பதையும், மிகவும் ஒழுக்க சீலர் என்பதையும் நான் அறிவேன். மேலும், சுவர்க்கத்தின் வாசல் உமக்காகத் திறந்திருக்கிறது என்பதைக் கூட நான் நம்புகின்றேன். ஆனால், மகனின் சாட்சியத்தை தந்தைக்குச் சாதகமாகவும், பணியாளனின் சாட்சியத்தை எஜமானனுக்குச் சாதகமாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று பெருமானார் விதித்துள்ளார்கள். எனவே, போதுமான சாட்சியங்கள் இல்லாத படியால் நீர் தாக்கல் செய்த வழக்கினைத் தள்ளுபடி செய்கின்றேன்.''



யூதன் : (அலியிடம் சென்று) அற்புதம், முன்னெப்போதும் நடவாதது, கற்பனைக்கு அப்பாற்பட்டது. கலீபா என்ற அந்தஸ்தினைக் கூட மதிக்கக் கூடாது என்பது ஒப்பற்ற சட்டமாகும். அந்தச் சட்டத்தினை விதித்தவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியாது. அவர் உண்மையில் இறைத்தூதராகவே இருக்க வேண்டும். அமீருல் முஃமினீனே! இந்தக் கவசம் உண்மையில் உங்களுடையது. தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து என் உடல், என் உள்ளம், என் விசுவாசம் எல்லாம் உங்களுடையதே. ''அல்லாஹ்வைத் தவிர ஆண்டவன் இல்லை; முஹம்மதுவே அவனுடைய திருத்தூதர்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நாடுகளும் சுதந்திர தினங்களும்

| | |
|---|---|
| ஜனவரி 4 | : மியன்மார் |
| ஜனவரி 26 | : இந்தியா |
| ஜனவரி 31 | : நௌரு |
| பெப்ரவரி 07 | : கிரெனடா |
| பெப்ரவரி 18 | : காம்பியா |
| மார்ச் 02 | : மொரோக்கோ |
| மார்ச் 06 | : கானா |
| மார்ச் 12 | : மொரீஷியஸ் |
| மார்ச் 20 - | : துனீஷியா |
| மார்ச் 25 - | : கிரீஸ் |
| மார்ச் 27 - | : டோகோ |
| மே 05 - | : டென்மார்க் |
| மே 15 - | : பரகுவே |
| மே 25 - | : ஆபிரிக்கா, ஜோர்தான் |
| மே 26 - | : கயானா |
| ஜூன் 01 - | : சமோவா |
| ஜூன் 12 - | : பிலிப்பைன்ஸ் |
| ஜூன் 19 - | : குவைட் |
| ஜுலை 04 - | : ஐக்கிய அரபு நாடுகள் |
| ஆகஸ்ட் 08 - | : பூட்டான் |
| ஆகஸ்ட் 16 - | : சைப்பிரஸ் |
| செப்டெம்பர் 02 - | : வியட்நாம் |
| ஒக்டோபர் 04 - | : லெஸோதோ |
| நவம்பர் 11 | : போலந்து |
| நவம்பர் 28 - | : பனாமா |
| டிசம்பர் 05 - | : தாய்லாந்து |
| டிசம்பர் 21 - | : நேபாளம் |

✎ ஜே.எம். கதீர்
தரம் 11
கொ/ அல்ஹிதாயா ம.வி.
கொழும்பு

## நீங்கள் முட்டையை அவித்து சாப்பிடுபவர்களா?



முட்டையை அவிக்க முன்னர் நன்றாக கழுவிக் கொள்ளுங்கள். சிலர் சோறு சமைக்கும் போது முட்டையையும் சேர்த்து சோற்றுடனே பொங்க வைக்கின்றனர். இது முற்றிலும் தவறாகும். காரணம், ஒரு ஜனாஸாவில் (மரணித்த ஒருவரின் உடலில்) இருந்து வெளியாகும் கழிவுகள்போல முட்டையை அவிக்கும் பொழுதும் ஒரு வகையான அசுத்தம் வெளியாகி சோற்று நீரை அசுத்தம் அடையச் செய்கின்றது. சோறு மற்றும் ஏனைய உணவுகளுடன் சேர்த்து முட்டையை அவித்தால் அந்த உணவையும் அது அசுத்தம் செய்கின்றது. இது நம் கண்களுக்கு தெரிவதில்லை என்பதை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

✎ ஏ.கே. ஸானாஸ் பேகம்
ஸாஹிரா கல்லூரி - குருணாகல்

## விஞ்ஞான கண்டுபிடிப்புகள்

| கண்டுபிடிப்பின் பெயர் | கண்டுபிடித்தவர் |
|---|---|
| கைக்கடிகாரம் | பார்லோமா மான் பிடி |
| வெப்பமானி | கலிலியோ கலிலி |
| கடிகாரம் (பெண்டூலம்) | கிறிஸ்டியன் ஹைசின் |
| மைக்கிரஸ்கோப் | ஜே. ஜொன்சன் |
| ஆகாய விமானம் | ரைட் சகோதரர்கள் |
| பலூன் | மாரன்ட் கோல்பியர்சகோ |
| போல் பெயின்ட் பேனா | ஜான் ஜே லாட் |
| மின்சார பற்றறி | வோல்டோ |
| மின் விளக்கு | தோமஸ் அல்வா எடிசன் |
| சைக்கிள் டயர் | ஜே.பி. டன்லப் |

✎ ஆர். றஸ்மி ஹஸன்
தேசிய பாடசாலை, ஓட்டமாவடி

## மொழிகளும் அதன் அட்சர எண்ணிக்கைகளும்

| | |
|---|---|
| தமிழ் மொழி | 247 |
| சீன மொழி | 214 |
| பாரசீக மொழி | 31 |
| ஸ்பானிய மொழி | 27 |
| அரபு மொழி | 28 |
| ஆங்கில மொழி | 26 |
| ஜேர்மனிய மொழி | 26 |
| துருக்கி மொழி | 26 |
| கிரேக்க மொழி | 24 |
| இலத்தீன் மொழி | 22 |
| இத்தாலி மொழி | 20 |
| பிரான்ஸிய மொழி | 16 |

✎ நுஸ்லா நஸீர்
தரம் 8
ஹேனுப்பிட்டிய ஸாஹிரா ம.வி.
வத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இபாதத்

## இபாதத்தின் நோக்கங்கள்

- ❖ உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்துதல்
- ❖ அல்லாஹ்வுடனான நெருக்கத்தை அதிகரிப்பது
- ❖ பாவமான காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழப் பயிற்றுவித்தல்
- ❖ நற்பண்புகளை வளர்த்தல்
- ❖ இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைதல்

✍ நாதியா ஹில்மி
நளீம் ஹாஜியார் ம.க.
பேருவளை

## இபாதத்தின் வகைகள்

- ❖ உடலோடு, செயலோடு தொடர்பானவை : தொழுகை, நோன்பு, ஹஜ்
- ❖ உள்ளத்தோடு தொடர்பானவை : இஃலாஸ், பொறுமை
- ❖ வார்த்தையோடு தொடர்பானவை : திக்ர், குர்ஆன் ஓதுதல்

# உலகின் மிகப் பெரியவை

| | |
|---|---|
| மிகப் பெரிய கடல் | தென் சீனக்கடல் (பரப்பு 297,4600 சதுர கி.மீ) |
| மிகப் பெரிய சமுத்திரம் | பரப்பளவில் - பசுபிக் சமுத்திரம் |
| | நீளத்தில் - அத்திலாந்திக் சமுத்திரம் |
| மிகப் பெரிய குடாநாடு / தீபகற்பம் | அராபியக் குடாநாடு (பரப்பு 325,000 சதுர கி.மீ) |
| மிகப் பெரிய கண்டம் | ஆசியாக் கண்டம் |
| மிகப் பெரிய ஆறு | அமேசன் ஆறு (நீளம் 6750 சதுர கி.மீ) |
| மிகப் பெரிய தீவு | கிறீன்லாந்துத் தீவு |
| மிகப் பெரிய பூங்கா | 'உப்ப பீபல்' எனும் தேசிய பூங்கா (கனடா) |
| மிகப் பெரிய நூதனசாலை | மியூசியம் ஒப் நெச்சுரல் ஹிஸ்டரி |
| மிகப் பெரிய விமானம் | 777 ஜெட் விமானம் |
| மிகப் பெரிய பத்திரிகை | கான்ஸ் டெல்சன் பத்திரிகை |

✍ எம். மின்ஹா
தரம் 9
அக்/அல்ஹிறா பெ.ப.பா.
அக்கரைப்பற்று

# அறிவுரை

நடக்கும் என்றே எதிர்பார்த்து
நாளும் கனவு காணாதே
நடக்காவிட்டால் மனம் சோர்ந்து
நடையும் தளர்ந்து வாடாதே

கிடைக்கும் என்றே எதிர்பார்த்து
கிழக்கும் மேற்கும் அலையாதே
கிடைக்காவிட்டால் மனம் சோர்ந்து
கீழாம் வழியை நாடாதே

இலவம் காயைப் பழமென்றே
ஏங்கிக் காத்த கிளியதுவும்
பல நாள் கழித்து வெடித்தவுடன்
பஞ்சாய்ப் போக ஏமாறும்

கிட்டும் பொருளைக் காத்துவிடு
கிட்டாதாயின் விட்டுவிடு
எட்டும் என்றால் முயன்றுவிடு
எட்டாதாயின் விட்டுவிடு

✍ எம்.என்.எப். நஸ்ரா
தரம் 8
மே/மது/ பலாந்தை மு.வி.

# செல்வங்கள்

❖ வாழ்வில் கிடைக்க வேண்டிய செல்வங்களை பின்வருமாறு காணலாம். இந்த செல்வங்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றவர்கள் வையகம் போற்றும் வாழ்வை பெறுவார்கள்.

1. வாழ்க்கையில் நமக்கு வழிகாட்டக் கூடிய கல்வி
2. நீண்ட ஆயுள்
3. நம்பிக்கைக்குரிய நண்பர்கள்
4. வாழ்வுக்கு தேவையான செல்வம்
5. உழைப்புக்கேற்ற ஊதியம்
6. நோயற்ற வாழ்க்கை
7. எதற்கும் கலங்காத மன வலிமை
8. அறிவு, ஒழுக்கம், ஆற்றல் கொண்ட குழந்தைகள்
9. மென்மேலும் வளரக் கூடிய புகழ்



✍ கே.எப். ஹலீமா
அது/பளளுவெவ மு.ம.வி.
கெக்கிராவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நாட்காட்டி சுவாரஷ்யங்கள்

நாள், வாரம், மாதம், வருடம் என அனைத்தையும் அறியத் தரும் நாட்காட்டி எமது வாழ்க்கையில் பல் வேறு வகையிலும் பயன் தருகின்றது. இதனை ஆங் கிலத்தில் 'Calendar' என்று அழைப்பர். இது 'Calendae' எனும் ரோமானிய மொழிச் சொல்லிலிருந்து உரு வானதாகும். ரோமானிய மொழியில் 'Calendae' என் றால் 'மாதத்தின் முதல் நாள்' என்று அர்த்தப்படுகின் றது. மொழியில் இதற்கு 'கணக்குப் புத்தகம்' என்று பொருள்.

மனிதன் காலத்தை அளவிட எண்ணினான். முத லில் பயிர்த் தொழில் செய்யும் காலங்களைக் கவனித் தான். நடுவது செய்வது முதல் அறுவடை செய்யும் காலத்தை கணக்கிட்டான். இந்த முதல் முயற்சியைத் தொடர்ந்து எகிப்தியர்கள் ஆண்டுக்கு ஒரு முறை நைல் நதியில் வெள்ளம் வருவதைக் கணித்து வெள் ளத்தைக் காலம் அளக்கும் காரணியாகக் கொண் டார்கள்.

ஒருமுறை மதகுரு ஒருவர் வெள்ளம் வருவதற்கு இடைப்பட்ட காலத்தில் 12 முறை சந்திரன் தோன்றி மறைவதைக் கவனித்தார்.

இது '12 மூன்ஸ்' (12 Moons) என அழைக்கப் பட்டு, பின்னர் 'மன்த்ஸ்' (12 Months) என்றாகி விட்டது. பின்னர் சில குறிப்பிட்ட நட்சத்திரங்கள் தோன்றி மறைவதை அடிப்படையாகக் கொண்டு 365 நாட்கள் எனப் பிரித்தனர். எகிப்தியர்கள்தான் கலண்டர் முறைக்கு வித்திட்டவர்கள் எனலாம். இக் கலண்டர் முறை ரோம மன்னர் ஜூலியஸ் சீசரினால் வகுக்கப்பட்டது. இதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், குழப்பங்களைக் களைந்து போப் கிரிகோரி என்ப வர் தீர்வு கண்டார். இன்று எம்மிடம் உள்ள கலண் டர் கிரிகோரி கலண்டர் ஆகும்.

பப்புவா நியூ கினியா நாட்டு மக்கள் குறிப்பிட்ட சில காலம் வரை நாட்காட்டி முறை பற்றி அறியா மல் இருந்துள்ளனர். ஒவ்வொரு கிறிஸ்மஸ் காலத்தி லும் கடற்கரைக்கு முட்டையிட வரும் ஆமைகளை வைத்தே அவர்கள் தங்கள் வயதை கணக்கிட்டுக் கொண்டனர்.

பழங்கால ரோமனியர்கள் தமது வீடுகளில் நாட் காட்டியைத் தொங்கவிட மாட்டார்கள். ஒவ்வொரு மாதம் முதல் நாள் ஊர்ப் பணியாளர்கள்தான் வீதி களுக்குச் சென்று புது மாதப் பிறப்பை அறிவிப்பார் களாம்.

முன்னைய காலத்தில் கிரேக்க நாட்டவர்கள் ஒரு வாரத்திற்கு பத்து நாட்களென்றும், ஒரு மாதத்திற்கு மூன்று வாரங்களென்றும் கணக்கிட்டு வந்துள்ளனர்.


✍ ஸாஜிதா ஹசீனா
மா/மின்ஹாஜ் மு.ம.வி
நிகொள்ள


## குட்டிக் கதை — கற்பிப்பவன்

குதிரை வண்டியில் தேங்காய்களை ஏற்றிக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தான் ஒருவன். குறுக்குப் பாதை ஒன்று வந்தது. அங்கே ஒரு சிறுவன் நின்றிருந்தான்.


''தம்பி, இந்தச் சாலையில் போனால் ஊர் வருமா?'' என்று கேட்டான்.

''வருமே...'' என்றான் சிறுவன். ''போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?'' ''மெதுவாகச் சென்றால் பத்து நிமிடத்தில் போய்விடலாம். வேகமாகச் சென்றால் அரை மணிநேரம் ஆகும்'' என்றான்.

சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டு குதிரை வண்டிக்காரனுக்குக் கோபம். ''என்ன கிண்டலா? வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும்?'' என்று கேட்டான். ''போய்த்தான் பாருங்களேன்'' என்று சிறுவன் சொன்னதும், அவன் வண்டியை வேகமாக விரட்டிச் சென்றான்.

சிறிது தூரம் போனதுமே சாலை முழுவதிலும் கற்கள் கொட்டிக் கிடந்தன. வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது. தேங்காய்கள் சிதறின. வண்டியை நிமிர்த்தி கீழே சிதறிய தேங்காய்களை பொறுக்கி எடுத்துப் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது.

வண்டிக்காரனுக்கு சிறுவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தது. கற்பிப்பவன் எவனாயினும் கல்வி என்பது பெறுமதியானதுதானே?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. அவதூறு கூறுவோருக்கான இஸ்லாமியத் தண்டனை யாது?
2. அல்குர்ஆனில் பிஸ்மில் இருமுறை இடம்பெறுகின்ற சூராவின் பெயர் என்ன?
3. ''உம்முல் மஸாகீன்'' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் துணைவியாரின் பெயர் என்ன?
4. இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாவது மாதம் எது?
5. இஸ்லாம் எத்தனை வகையான விவாகரத்து முறைகளை அனுமதித்துள்ளது?
6. அகழி யுத்தத்தின்போது முஸ்லிம்களுக்கு எதிராக நின்ற கூட்டுப் படையின் தலைவனாக வந்தவர் யார்?
7. விடையளித்தல் என்பதற்கான அரபுப் பதம் யாது?
8. அஹ்லுல் ஜன்னா, பத்தூல், ராஜியா, மர்ஜியா, ஜாக்கியா உட்பட இன்னும் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர் யார்?
9. ரஜப் மாதம் எத்தனையாவது மாதமாகும்?
10. ஜனாஸாத் தொழுகையின் பர்ளுகள் எத்தனை?
11. இஸ்லாத்தில் வியாபாரம் செய்வதற்கு நான்கு ருக்னுகள் உள்ளன. அவை எவை?
12. மதம் மாறுதலுக்கான இஸ்லாமியத் தண்டனை யாது?
13. அனுமதிக்கப்பட்ட பயணம் மேற்கொண்டு அதனை நிறைவு செய்ய வழியில்லாது இடையில் நிற்பவர்களும் ஸகாத் பெற அருகதையுடையோராவர். அவர்களைக் குறிக்கும் அரபுப் பதம் யாது?
14. திருமணமான ஒருவர் விபசாரத்தில் ஈடுபட்டால் அவருக்கான இஸ்லாமியத் தண்டனை யாது?
15. ரஸூல்மாருக்கு அவசியம் இருக்க வேண்டிய (வாஜிபான) ஸிபத்துகள் நான்கும் எவை?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. சில வருடங்களுக்கு முன்பு இந்திய வம்சாவளியினரான பிஜியின் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் சிலரும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் பணயக்கைதிகளாகச்சிறைபிடிக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு சிறைபிடிக்கப்பட்ட பிரதமரின் பெயர் என்ன?
2. கி.பி. 969 இல் பாதிமி ஆட்சியாளரான முஈஸ் என்பவரின் தளபதியாகத் திகழ்ந்த ஜவ்ஹர் எகிப்தைக் கைப்பற்றிய அதே ஆண்டிலேயே கெய்ரோ எகிப்தின் தலைநகராகியது. அவ்வருடத்தில்தான் 'கெய்ரோ மஸ்ஜித்' என்ற தற்போதைய அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இந்த மஸ்ஜித் கல்வி நிலையமாகப் பரிணமிக்கத் தொடங்கியது எந்த பாதிமி ஆட்சியாளரின் காலத்திலாகும்?
3. 'The Hundred' எனும் நூலில் முதலிடம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உலகில் மிகச் சிறந்த செல்வாக்கு மிக்க மனிதர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பவராக முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தை நூலாசிரியர் இப்படிக் கூறுகிறார்:
''முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்தான் உலக வரலாற்றிலேயே சமயத்துறை, உலகியல் துறை இரண்டிலும் மிகவும் வெற்றிகரமானவராகத் திகழ்ந்த மாமனிதராவார்.'' 'The Hundred' நூலை வெளியிட்டவரின் பெயர் என்ன?
4. 1931 இல் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக இலங்கையைச் சேர்ந்த தமிழ் மகன் ஒருவரே நியமிக்கப்பட்டிருந்தார். அவர் யார்?
5. 1972 இல் முதலாவது சோஷலிசக் குடியரசு யாப்பை வரைவதற்குப் பொறுப்பாகவிருந்த அரசியலைப்பு அமைச்சரின் பெயர் என்ன?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

கீழுள்ள பந்தியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடை தருக.

أُسْرَةُ أَحْمَدَ لَا تنَامُ بعْدَ الصَّلَاةِ يوْمَ العُطْلَةِ. طَهَ يكْنُسُ غُرْفَةَ الجُلُوْسِ. وفَاطِمَةُ يكْنُسُ غُرْفَةَ النَّوْمِ, ولَطِيْفَةُ تكْوِي المَلَابِسَ, وجَدَّةُ تَغْسِلُ الأَطْبَاق. وَالجَدُّ يقْرأُ القُرْآنَ.

ماذا تَفْعَلُ الجَدَّةُ؟ الجَدَّةُ تَغْسِلُ الأَطْبَاقَ (உதாரணம்)

ماذا يَفْعَلُ أَحْمَدُ؟ ..............................

ماذا تَفْعَلُ فَاطِمَةُ؟ ..............................

ماذا تَفْعَلُ لَطِيْفَةُ؟ ..............................

ماذا يَفْعَلُ طَهَ؟ ..............................

ماذا يَفْعَلُ الجَدُّ ؟ ..............................

கீழுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு பொருத்தமான விடையளிக்குக.

يَسْتَيْقِظُ طَاهِرٌ عِنْدَ الفَجْرِ, ويَتَوَضَّأُ فِيْ البَيْتِ. وَيَذْهَبُ إِلَى المَسْجِدِ. ويُصَلِّيْ طَاهِرٌ الفَجْرَ فِيْ المَسْجِدِ. طَاهِرٌ يقْرَأُ القُرْآنَ , وَلَا ينَامُ بعْدَ الصَّلَاةِ

مَتَى يَسْتَيْقِظُ طَاهِرٌ ؟ ..............................

أَيْنَ يَتَوَضَّأُ ؟ ..............................

أَيْنَ يَذْهَبُ ؟ ..............................

أَيْنَ يُصَلِّيْ الفَجْرَ ؟ ..............................

هَلْ يَنَامُ بَعْدَ الصَّلَاةِ ؟ ..............................

مَاذَا يَفْعَلُ بَعْدَ الصَّلَاةِ ؟ ..............................

கீழுள்ள உரையாடலுக்கு பொருத்தமான வசனங்களை இணைக்குக.

عمر :..............................................

أحمد: أَسْتَيْقِظُ عِنْدَ الفَجْرِ

عمر :..............................................

أحمد: أُصَلِّي الفَجْرَ فِيْ المسْجِدِ

عمر..............................................

أحمد : لَا أَنَامُ بَعْضَ الفجر

عمر: مَاذَا ..............................................

أحمد ..............................................

عمر: وَمَتَى تَذْهَبُ ..............................................

أحمد: .............................. السَّاعَةَ السَّابِعَةَ

عمر ..............................................

أحمد: لا أَذْهَبُ بِالسَّيَّارَةِ؟

- هَلْ تَذْهَبُ بِالْحَافِلَةِ
- أَذْهَبُ إِلَى المَدْرَسَةِ السَّاعَةَ السَّابِعَةَ
- إِلَى المَدْرَسَةِ
- مَتَى تَسْتَيْقِظُ؟
- أَيْنَ تُصَلِّيْ الفَجْرَ؟
- هَلْ تَنَامُ بَعْدَ الفَجْرِ؟
- تَعْمَلُ فِيْ الصَّبَاحِ
- أَقْرَأُ القُرْآنَ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**صِلْ بَيْنَ جزأي الجُمْلَةِ** இணைக்குக.

| | |
|---|---|
| يغْسل | للصّلاة |
| يشاهد | الجمعة في المسجد |
| يذهب إلى | الصَّحيفة |
| يكنس | المدرسة |
| يقرأ | الغرفة |
| يصلّي | الملابس والأطباق |
| يكنس | التلفاز |
| يتوضّأ | في حَيِّ الجامعةِ |

வித்தியாசமான சொல்லின் மீது வட்டமிடுக.

**ضَعْ عَلَامَةَ الدَّائِرَةِ حَوْلَ الْكَلِمَةِ الغَرِيْبَةِ**

ظهر– عصر– مغرب– أذان

شاي– قهوة– جوعان– ماء

سمك– شراب– دجاج– لحم

طعام– فَطُور– غداء– عَشَاءٌ

مائدة– جوعان– كسلان– مريضة

يأكل– يشرب– يعمل– الّليل

مكة– المدينة– مُنبِّه– المسجدُ النبويّ

**صِلْ بَيْنَ الشَّيْءِ والمَكَانِ الَّذِي يُوْجَدُ فِيْهِ.** இணைக்குக.

| الشّيئ | المكان |
|---|---|
| فرن | غرفة الجلوس |
| سرير | حمّام |
| أريكة | مطبخ |
| مرآة | غرفة النوم |
| كتاب | مسجد |
| صلاة | مدرسة |

**إِقْرَأْ الفِقْرَةَ , ثُمَّ ضَعْ العَلَامَةَ(✓) أَوْ (×)**

> طَاهِرٌ يُصَلِّي الظُّهْرَ والعَصْرَ فِي مَسْجِد عُثْمَانَ. وَيُصَلِّي المَغْرِبَ والعِشَاءَ فِي مَسْجِد عَلِيٍّ , طَارِقٌ يَضَعُ المُنَبِّهَ بِجَانِبِهِ, وَيَسْتَيْقِظُ مُبَكِّرًا. وَيُصَلِّي الْفَجْرَ فِيْ مَسْجِدِ وَيَنَامُ بَعْدَ صَلَاةِ الفَجْرِ

طَارِقٌ يُصَلِّي الظُّهْرَ فِي مَسْجِدِ عُثْمَانَ.

طَارِقٌ يُصَلِّي العِشَاءَ فِي البَيْتِ.

طَارِقٌ يُصَلِّي الْفَجْرَ فِي البَيْتِ.

طَارِقٌ يَنَامُ بَعْدَ صَلَاةِ الفَجْرِ.

طَارِقٌ يَضَعُ المُنَبِّهَ بِجَانِبِهِ.

طَارِقٌ يَسْتَيْقِظُ مُبَكِّرًا.

வரலாற்றுச் சம்பவம்

## பெஞ்சமின் ஃபிராங்கிளின் வாழ்வில்...


*அமெரிக்காவைப் புகழ் மிக்க கண்டமாக மாற்றியமைத்த பெருமைக்குரியவர்களுள் பெஞ்சமின் ஃபிராங்கிளினும் ஒருவர். இளமைப் பருவத்தில் பெரிய காற்றாடியைப் பறக்கவிட்டு, அதன் நூலைப் பிடித்துக் கொண்டே ஆற்றைக் கடந்து சென்று, அருகில் இருந்து பார்த்தவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியவர். அமெரிக்காவின் முதல் சீர்திருத்தவாதி, முதல் அமெரிக்கத் தத்துவஞானி, முதல் அமெரிக்கத் தூதுவர், இக்காலத் தெருவிளக்கின் தந்தை, முதல் அரசியல் கேலிச் சித்திரக்காரர், நடமாடும் புத்தகசாலையை முதலில் தொடங்கியவர், 4 முறை வெனிசு ல்வேனியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், செய்தித் தபாலை தபால் மூலம் செல்வதை முதன் முதலில் ஏற்படுத்தியவர்,*

*முதன் முதலில் தெருவைச் சுத்தம் செய்யும் இலாகாவைத் தொடங்கியவர், மின்னலுக்கும் மின்சாரத்திற்கும் உள்ள ஒரே தன்மையைக் கண்டுபிடித்தவர், முதல் அமெரிக்க சித்திரக் கவிஞர், வியாபார விளம்பரத்தை முதன் முதலில் செயற்படுத்தியவர், மூக்குக் கண்ணாடியின் தந்தை, ஆங்கில எழுத்துக் கூட்டு முறையைச் சீர்திருத்தியவர், தீயணைக்கும் இலாகாவைத் தொடங்கியவர்,*

*அமெரிக்க குடியரசுக் கட்சியின் நிறுவனர், தற்கால தபால் அலுவலக முறையினைத் தொடங்கியவர், பிராங்கிளின் சுட்டடுப்பைக் கண்டுபிடித்தவர், விளம்பரத்தில் முதல் உவமை, உதாரணம் உபயோகித்தவர், நிலத்தை வளமாக்கும் பிளாஸ்டர் ஆப் பார்சை உபயோகிக்க எடுத்துக் காட்டியவர், அசைந்தாடும் நாற்காலியைக் கண்டுபிடித்தவர், தற்கால பல வைத்திய முறையின் தந்தை என பல முதல்களின் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

***Assalamu alaikum friends!***

***Hope you all are back to studies after enjoying a lot in sports meet. Therefore, I too, thought of doing something serious this time. In this issue we are going to learn a new subject.***

## *Our topic for this month is*

# "STEREOTYPES"

What do you know about stereotypes?

Have you heard this word before?

Do you know the meaning of this word?

If you do not know the answers to the above questions, worry not because we are going learn about stereotypes. After learning, you'll be able to answer the above questions Insha Allah..

To begin with, let me give you some examples.

1. Girls like pink and boys like blue
2. All Arabs and Muslims are terrorists
3. Women aren't as smart as men
4. Boys are messy and unclean
5. Girls are only concerned about physical appearance
6. Women do not drive well.
7. Men hate reading
8. Men cannot cook
9. Girls are not good at sports
10. Women are supposed to earn less than men

What do you think of the above sentences? You all might have got an idea of what stereotypes are after looking at the above sentences. Isn't it?

Stereotype means, to believe unfairly that all people or things with a particular characteristic are the same. Giving a title to an entire community, nation or a particular religious group, by just looking one or a few of them, there are both positive and negative stereotypes.

Many stereotypical ideas are often gender based or based on race or religion. You may very well understand this from the above examples.

***My dear friends I want you all to learn an important lesson through this issue. It is not a good practice to brand a person or a community by just looking one aspect of them.***

***As Muslims we cannot give judgment on anything by seeing and hearing.***

Be very careful before you make judgments..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

The Prophet said, "None of you will have faith till he wishes for his (Muslim) brother what he likes for himself."
Sahih Bukhari

## Your Corner

### Laugh a while:



**Teacher: 'I have failed in my exam' what 'tense' is this?**
**Student: Future tense..**

## The World

Great, wide, beautiful, wonderful world
With the wonderful water round you curled
And the wonderful grass upon your breast
World you are beautifully dressed


The wonderful air is over me,
And the wind is shaking the tree,
It walks on the water
And whirls the mills
And talks to itself on the top of the hills

You friendly Earth! How far do you go with?
The wheat fields that nod and the rivers that flow
With cities and gardens and cliff and isles..
And people upon you for thousands of miles??

Ah! You are so great and I am so small
And you, when I said my prayers today
A whisper inside me seemed to say

YOU are more than the earth
Though you are such a dot...

***Mansoor Fathima Aseela Thahy***
***Sumaiya Ladies Arabic College***



## To my Sweet Friend...

You are the best friend that I need..
I think about you day and night..
And I know that I am right..
You are a special person,
I hope that you know
Therefore, all the sufferings
and sadness
I threw..
Threw to the space..
Threw to the unknown..
Do you know your face is as Moon??
I hope we will meet soon..
And will spend our days happily..
I will love you ever and ever..
And I will forget you never...

***Ruqaiya Rizwan***
***China fort, Beruwala***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHOTOSYNTHESIS

Light gives energy
Living green leaves absorbs it
Precious water is absorbed by roots
Passing up the leaves
Gas Carbon dioxide from air,
Get through the stomata
Day hour chloroplast of greeny,
Daily make food with those
We enjoy our meals
With that food energy,
Without considering that
We destroy the greenery
To make our life comfortable
To build huge buildings
Heavy rain takes the sail,
Heat dry up the bare land
No resistance for the floods
Till starving for FOOD and AIR
Tiny children..
Think of it!!!

*Huzni Atham Marzook 07*
*Isupathana College Colombo-5*

# My Motherland

My motherland is Sri Lanka. It is an island situated in the Indian Ocean. My motherland is known as The Pearl of the Indian Ocean because her shape and natural beauty. My country has a very long history. As Sri Lankans we must be proud of that.

People from other countries come here to see beautiful places in my country. Mahavila is the longest river in Sri Lanka Also Kelani ,Walave and kalu are some of long rivers .Pidurutalagala is the highest mountain in Sri Lanka .Namunukula, Samanala and Kirigalpotta too are high mountains. There are many waterfalls, gardens, historical sites in my country. Sri Lanka is well known throughout the world for its beautiful beaches .Most of the people admire our country. The country is famous for the production and export of tea, coffee, coconuts, rubber and cinnamon - which is native to the country. The natural beauty of Sri Lanka's tropical forests, beaches and landscape, as well as its rich cultural heritage, make it a world famous tourist destination. The island also boasts the first female Prime Minister in the modern world, Sirimavo Bandaranaike.

*Fathima Manal*
*Giri/ Kekunagolla national school*
*Kurunegala*

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வையகம் வியக்கும் வைராக்கியம்!

அப்துல்லாஹ் பின் குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உரோம அரசனால் சிறை பிடிக்கப்பட்டார்கள். ''குதாபா நீ இஸ்லாத்தை விட்டு விடு. நான் உனக்கு எனது மகளை திருமணம் செய்து தருகிறேன்'' என உரோம அரசன் வேண்டினான்.

ஓர் அரசருடைய பெண் சாதாரண பெண் அல்ல. ஓர் அரசருடைய மகளை திருமணம் செய்தால் என்ன பதவி கிடைக்கும்? இளவரசராகலாம். அப்துல்லாஹ் ''முடியாது... முடியாது...'' என்று கூறினார். பிறகு அரசன் ''அப்துல்லாஹ் உன்னை இந்த நாட்டின் மன்னனாக ஆக்குகிறேன். இஸ்லாத்தை விடுவாயா?'' அப்துல்லாஹ் ''முடியாது...'' என்று பதில் கூறினார்.

அரசன் இரண்டு காவலாளிகளை அழைத்தான். அவர்கள் இருவரையும் குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கண்முன்னே ஒரு வெந்நீர் பாத்திரம் ஒன்றிலே, அப்படியே தூக்கிப் போட்டான். கை வேறு, கால் வேறு தனித் தனியாகப் பிரிந்து வெந்நீர்ப் பாத்திரம் முழுவதும் இரத்தமாக மாறிவிடுகிறது.

''குதாபா இந்த நிலையைப் பார். இதற்குப் பிறகும் இந்த ஈமான், இஸ்லாம் எல்லாம் தேவையா?'' என அரசன் கேட்டான். அப்துல்லாஹ் பின் குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மறுபடியும், ''முடியாது...'' என்று பதிலளித்தார். ''உனக்கு ஒருநாள் அவகாசம் தருகிறேன். சிந்தித்து பதில் கூறு; இல்லை என்றால் நாளை உனக்கும் இதே நிலைதான்.''

மறுநாள் காலை அரசன் அழைத்து, '''குதாபா இன்னுமா நீ ஈமான் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள், ''அட முட்டாள் அரசனே! என்னுடைய ஈமானை அந்த மரணம் ஒன்றும் செய்துவிட முடியாது...'' என்று கூற, அப்துல்லாஹ் பின் குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நெருப்புப் பாத்திரம் எரிந்து கொண்டிருக்கும்போது அவரை கயிற்றினால் கட்டி மரத்தில் ஏற்றி தலை கீழாகத் தொங்கவிட்டார்கள்.

குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அழுதார்கள். அரசன் அதனைப் பார்த்து ''இறக்குங்கள்... இறக்குங்கள்...'' என்றான். குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கேட்டான், ''குதாபா ஏன் அழுகிறாய்? உன் மனம் மாறிட்டதா? என்னுடைய கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்து கொள்கிறாயா?''

குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள், ''இல்லை அரசனே! என்கோர் ஆசை இருக்கிறது. என் அல்லாஹ்வுடைய பாதையிலே கொடுப்பதற்கு என்னிடம் ஓர் உயிர்தான் இருக்கிறது. என் உடம்பிலிருக்கும் உரோமங்கள் எல்லாம் உயிராக இருக்க வேண்டுமே! அந்த ஒவ்வொன்றையும் அல்லாஹ்வுடைய பாதைக்காக கொடுக்க வேண்டுமே! நீ இந்த உயிரை எடுத்தால் அல்லாஹ்வுடைய பாதைக் குக் கொடுப்பதற்கு என்னிடத்திலே வேறு உயிர் இல்லையே! என்பதற்காகத்தான் அழுகிறேன்...'' என்று கூறினார்கள்.

அரசன், என் நெற்றியிலே வந்து முத்தமிடு. உன்னுடைய மார்க்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்துல்லாஹ் பின் குதாபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் முத்தமிட்டதும் விடுதலை செய்யப்பட்டார்கள்...

**அப்துஸ் ஸலாம் முஹம்மத் பாஹிம்**
**இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி**

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 80 கசையடிகள்
2. சூரதுன் நம்ல்
3. அன்னை ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
4. ரமழான் மாதம்
5. 3
6. அபூசுபியான்
7. இபாஜா
8. ஹஸரத் பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
9. 7 ஆவது
10. 7
11. விற்பவன் வாங்குபவன், விற்கப்படும் பொருள், பேசி முடித்தல்
12. மரண தண்டனை
13. இப்னுஸ் ஸபீல்
14. மரண தண்டனை
15. ஸித்கு, அமானத், தப்லீஹ், பத்தானத்

**பொது அறிவு**

1. மகேந்திர சௌத்ரி
2. அல் அஸீஸ் காலத்தில்
3. மைக்கல் எச். ஹாட்
4. சுவாமி விபுலாநந்தர்
5. கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 06

## அனுராதபுர அரசின் வீழ்ச்சியும் முஸ்லிம்களும்


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்


10 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியலில் தென்னிந்திய செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்டது. இக்காலப் பிரிவில் இலங்கை மன்னர்கள் கடைப் பிடித்த வெளிநாட்டுக் கொள்கை தென்னிந்தியாவில் பலம் பெற்று வந்த சோழரைப் பகைத்துக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது.

5 ஆம் காசியப்பன் (914-923) காலப் பிரிவில் 1 ஆம் பரராஜ சோழன் பாண்டியர்களுக்கு எதிராக படையெடுத்தான். அப்போது பாண்டிய மன்னன் 2 ஆம் மாறவர்மன் காசியப்பனிடம் உதவி கோரினான். அதனை ஏற்ற இலங்கை மன்னன் ‘சக்க’ எனும் தளபதியின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தான். இப்படையையும் பாண்டியப் படையையும் வெள்ளூர் எனும் இடத்தில் பராந்தகன் முறியடித்தான். இந்நிகழ்வு சோழர்கள் இலங்கை மீது அதிருப்தி கொள்வதற்கு காரணமாக அமைந்தது. 5 ஆம் காசியப்பன் முதல் 5 ஆம் மகிந்தன் (982-1029) வரை சோழர்கள் இலங்கைக்கு எதிரான இராணுவ, அரசியல் கொள்கைகளையே கடைப்பிடித்தனர்.

5 ஆம் மகிந்தன் அனுராதபுரத்தின் இறுதி மன்னனாவான். அவனது அரசியல் வாழ்வை உற்று நோக்கும் போது அவனுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவு நிலவியிருப்பதைக் காண முடிகின்றது. இம்மன்னன் பலமுறை சோழர்களின் அடக்குமுறைகளுக்கு அஞ்சி உருகுணைக்கு தப்பியோடினான். அங்கு பல அரசியல் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தான். இம்மன்னனோடு மிக நெருக்கமான உறவு பேணிய முஸ்லிம் வர்த்தகர் பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது. மகாமுதலியார் ஏ.டி. சேரம் அவர்கள் தொகுத்த ஸன்னஸ (அரசர்களால் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துகள், உரிமைகள் பற்றிய எழுத்தாவணம்) தொகுப்பில் இதற்கான சான்று காணப்படுகின்றது. 5 ஆம் மகிந்தனின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1010 ஆம் ஆண்டு பேருவளை கொரகதுவ எனும் இடத்தில் வசித்த பெரிய முதலி மரிக்கார் எனும் வணிகப் பிரமுகரே 5 ஆம் மகிந்தனோடு நல்லுறவு பேணிய முஸ்லிம் வணிகராவார்.

பெரிய முதலி மரிக்கார் 5 ஆம் மகிந்தனின் வேண்டுகோளுக்கு ஏற்ப தென்னிந்தியாவின் சாலிய எனும் கிராமத்திலிருந்து ஏழு நெசவாளர்களை அழைத்து வந்து உதவியுள்ளார். இதற்கு உபகாரமாக மன்னன் வழங்கிய சன்னஸ பத்திரத்தில் அந்த நெசவாளர்களின் பெயர்களும் பெரிய முதலி மரிக்காருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பரம்பரையினருக்கும் வழங்கப்பட்ட சலுகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப் பத்திரத்தில் வழங்கப்பட்டிருந்த சலுகைகள், உரிமைகள் பின்வருமாறு அமைந்திருந்தன:

1. பெரிய முதலி மரிக்கார் அவரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ‘ராஜகாரியமாக’ பல்லக்கு தூக்கும் சேவையில் ஈடுபடக் கூடாது.
2. பணவரி அவர்களிடமிருந்து அறவிடப்படக் கூடாது.
3. அவரது பெருமையும் கௌரவமும் பாதுகாப்பட வேண்டும்.
4. அவர்கள் வேண்டும் நேரத்தில் அவர்களது சமயக் கடமைகளை நிறைவேற்ற, பள்ளிவாசல் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்படுகிறது.
5. அவர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.
6. அவர்கள் கேட்கும் எந்த ஒரு நிலமும் வழங்கப்படல் வேண்டும்.
7. பெரிய முதலி மரிக்காரின் பரம்பரையினருக்கும் பல்லக்கு தூக்கும் சேவையில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர்.
8. அவர்கள் விரும்பும் எந்த ஒரு துறைமுகத்திலும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சன்னஸ வாசகங்கள் மன்னன் எவ்வளவு மதிப்புடன் முஸ்லிம் சமூகத்தை நோக்கியுள்ளான் என்பதைக் காட்டுகின்றன. அதுவும் அரசியல் ரீதியாக மிக சிக்கல் நிறைந்த காலப் பிரிவாக இது அமைந்தது. நாம் ஏற்கனவே குறித்தவாறு சோழர்களின் ஆதிக்கம் இலங்கையில் வலுப் பெற்றிருந்தது. கி.பி. 993 இல் இராஜராஜ சோழனும், கி.பி. 1017 இல் இராஜேந்திர சோழனும் படையெடுத்தனர். கி.பி. 1017 இல் நடந்த படையெடுப்பு இலங்கையை முழுமையாக சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. 5 ஆம் மகிந்தன் சோழர்களால் சிறை பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டான். 15 ஆம் நூற்றாண்டுகள் தொடர்ந்து வந்த அனுராதபுர அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கி.மு. 377 இல் பண்டுகாபயனோடு ஆரம்பிக்கும் அரபிகளின் இலங்கை உறவும் இஸ்லாம் அறிமுகமாவதைத் தொடர்ந்து உருவாகும் முஸ்லிம் சமூக அமைப்பும் அனுராதபுர அரசியல் காலப் பிரிவில் அடைந்து வந்த வளர்ச்சிப்படி முறைகளையும் விளங்கினோம். கி.பி. 1017 இல் 5 ஆம் மகிந்தனோடு அனுராதபுர அரசியல் யுகம் முற்றுப் பெற்றாலும் முஸ்லிம்களின் வணிக முயற்சிகளும் பணிகளும் முற்றுப் பெறவில்லை.

அனுராதபுர இராஜதானியின் துறைமுகம் முக்கிய துறைமுக நகராக மாற்றம் பெற்றது. கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் அனுராதபுர அரசியல் பலவீனமான நிலையில் இருந்தபோதும்கூட இத்துறைமுகம் சர்வதேச வணிகத்தில் உயர் நிலையில் இருந்தது. இதனை அண்டி முஸ்லிம் குடியேற்றங்கள் பலதும் காணப்பட்டன. இப்பிரதேசங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட அரபு சிபாசனங்களும், சாஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்களும் இதற்கு சான்றாக அமைகின்றன. அனுராதபுர அரசியலின் வீழ்ச்சிக்கு பிறகும் இந்த வணிக நடவடிக்கை வலிமையுற்று விளங்கியது. இவற்றைக் கொண்டு நடத்திய முஸ்லிம்கள் தேசத்தின் வலிமைக்கும் ஸ்திரத் தன்மைக்கும் உரமூட்டும் சக்தியாக அமைந்தனர். இது தொடர்ந்து வந்த ஒவ்வோர் இராஜதானியிலும் தொடர்வதைக் காணலாம்.

# முதலாம் உலகப் போர் எப்படி ஆரம்பித்தது?



முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தமைக்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. ஆனால், அதற்கான உடனடிக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்வது சுவையானது. முதலாம் உலகப் போர் 1914 தொடக்கம் 1918 வரை நடைபெற்றது. உலகப் போர் என்று பெயர் வரக் காரணம் முழு உலகுமே யுத்தத்தில் ஈடுபட்டதனாலல்ல. மாறாக, உலகில் அன்றிருந்த பிரதான நாடுகள் அந்த யுத்தத்தில் பங்குபற்றியதனாலாகும்.

இந்த யுத்தத்தில் ஒரு புறத்தில் பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் இருந்தன. இந்த நாடுகள் நட்பு நாடுகள் என்றழைக்கப்பட்டன. அவற்றின் எதிர்ப்புறத்தில் ஜேர்மனி, ஒஸ்திரியா, பல்கேரியா ஆகிய நாடுகள் இருந்தன. அவை அச்சு நாடுகள் என்றழைக்கப்பட்டன.

நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தம் ஆகாயம், தரை, கடல் மார்க்கமாக நடைபெற்றது. உலகின் முதன் முதலாக யுத்த தாங்கிகள் பயன்படுத்தப்பட்டதும் இந்த யுத்தத்தில்தான். பிரித்தானியாவே இதனை முதன் முறையாக பயன்படுத்தியது.

ரஷ்ய யுத்தம் 1870 இல் நடைபெற்றது. அதில் ரஷ்யா பிரான்ஸைத் தோற்கடித்தது. பிரான்ஸின் முக்கிய பிரதேசங்களான அல் சேஸ், லொரேன் என்பவற்றை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டது. இதனால் பிரான்ஸ் ஜேர்மனியுடன் கடும் கோபத்தில் இருந்தது. ஜேர்மனியைப் பழிவாங்க பிரான்ஸ் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தது.

ஐரோப்பாவின் அன்றைய ஏகாதிபத்திய நாடுகளாக இருந்த பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி என்பன குடியேற்றங்களை அமைக்கும் போட்டியிலும் பல குரோதங்களை வளர்த்திருந்தன.

யுத்தத்திற்கான உடனடிக் காரணமாக அமைந்தது 1914 ஜூன் 28 ஆம் திகதி ஒஸ்திரிய இளவரசனான பர்டினணட் ஸேர்பியர்களால் கொல்லப்பட்ட சம்பவமாகும். ஸேர்பியா இக்குற்றச்சாட்டை மறுத்தது. ஒஸ்திரியா விதித்த நிபந்தனைகளை ஏற்க ஸேர்பியா மறுக்கவே ஒஸ்திரியா போர்ப் பிரகடனம் செய்தது. இதனைத் தொடர்ந்து மேற்கூறிய காரணங்களால் ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றாக யுத்தத்தில் இறங்கின. 1914 ஜனவரி 28 ஆம் திகதி போர் ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

''வாங்க, எப்ப வந்தீங்க...?'' என்றாள் தேய்ந்த குரலில்.

''என்ன கதீஜா... நான் வந்தது கூட உங்களுக்கு தெரியாதா...? அப்பிடி என்ன கவல...? இப்படி உட்கார்ந்து அழுத வண்ணம் இருக்கீங்க'' என்றார் அவள் கணவன் அம்ஜத்.

கதீஜா பதில் கூற வாயைத் திறக்க முன்பே நடப்பதைப் பார்த்து கொண்டிருந்த மகள் அஸ்மா, முந்திக் கொண்டாள்...

''எல்லாம் உங்கட மகனாலதான் வாப்பா. அவன் செய்ற வேலைகளால உம்மா இப்படி ஒவ்வொரு நாளும் அழுறாங்க. நீங்க வந்தா அத காட்டிக் கொள்ளாம மறச்சிடுறாங்க. இண்டைக்கு நீங்களே அத கண்டுட்டீங்க...'' என்றாள் சற்று ஆவேசத்துடன்.

அம்ஜத்துக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவள் அஸ்மா; இரண்டாவது மகன் அஸ்லம். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள். அம்ஜத் வறுமையிலும் குடும்பத்தை செம்மையாக நடத்தினார்.

அஸ்லம் ஒழுக்கமானவன். அவன் மீது பெற்றோர் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். உயர் தரம் படிப்பதற்காக அவனை வெளியூர் பாடசாலையொன்றில் சேர்த்தனர். அவனும் நல்ல முறையில் கல்வியை தொடர்ந்தான். மாதத்திற்கு ஒருமுறை வீடு வந்து செல்வான். பணம் தேவை என்று ஒரு நாளும் பெற்றோரை வற்புறுத்த மாட்டான். அவனின் இந்த செயற்பாடுகள் பெற்றோரை மகிழ்வூட்டிற்று.

திடீரென ஒருநாள் அஸ்லம் அவசரமாக பணம் தேவை என அறிவித்தான். பெற்றோர் சற்று ஆச்சரியம் அடைந்தாலும் மகனுக்கு தேவை இருக்கும் என எண்ணி பணத்தைத் தேடி அனுப்பி வைத்தனர். ஆனால், இது வழக்கமாகியது. அஸ்லம் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தான். பெற்றோருக்கும் காரணம் புரியவில்லை. ஒருநாள் அவனிடமே கேட்டு விட்டனர்...

''ஏண்ட பிரண்ட்ஸ் எல்லோரும் நல்ல வசதியா இருக்காங்க... நல்லா டிரஸ் பண்றாங்க... நல்ல நல்ல போன் வைச்சிருக்காங்க... சிகரட் கூட குடிக்கிறாங்க... ஏன் நானும் அப்படி இருக்கக் கூடாது...''

இதுதான் அவனது ஒரே பதிலாக இருந்தது. மகனுக்கு பணம் அனுப்பினால் தீயவற்றுக்கு அடிமையாகுவான். தேவையைத் தவிர பணம் அனுப்புவதை பெற்றோர் நிறுத்திக் கொண்டனர். இதனால் விரக்தியுற்ற அஸ்லம் படிக்க முடியாது என்று கூறி தனது புத்தகம், பையுடன் வீட்டுக்குள் திடீரென்று நுழைந்தான்.

''ஏன், மகன் திடீரென்று சொல்லாம வந்திருக்கீங்க?'' என்றாள் உம்மா கதீஜா.

''ஏன் சொந்த வீட்டுக்கு வர எல்லார்கிட்டயும் சொல்லிட்டுத்தான் வரணுமா!!''

என்று முகத்தில் பாய்ந்தான் அஸ்லம். மகனின் பேச்சால் கவலையடைந்த கதீஜா ''இல்லை மகன் உங்களுக்கு சுகயீனம் ஏதுமோ என்று நான் பயந்துட்டன். அதனாலதான் கேட்டன்.''

''நான் இனி படிக்கப் போறதில்ல. நான் சம்பாதிக்கணும். எனக்கு சல்லி வேணும். நா ஆசப்பட்ட மாதிரி வாழணும். வாப்பா சம்பாதிக்கிறத வச்சி ஒன்டும் பண்ண ஏலா. இப்படியேதான் கடைசி வரைக்கும் பிச்சக்காரனா வாழ வேண்டி வரும்'' என்று ஆவேசத்துடன் கூறி முடித்தான்.

அவன் கூறி முடிக்க முன்பே அம்ஜத்தும் வீட்டுக்குள் நுழைந்தார். மகனின் பேச்சைக் கேட்ட அவர் அசந்துபோனார். வார்த்தைகள் வரவில்லை.

# இதயமொன்று கல்லாகி



ஹஸ்னா புகாரி
தெல்தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் ஏதோ சொல்ல முயன்ற அஸ்லமை,

''நிறுத்துடா! ஓண்ட வாப்பா ஒனக்கு என்ன கொரச்சல் வைச்சிட்டாரு? நீ கேக்றத வாங்கி தரல்லயா? நீ ஆசப்பட்டத செய்யல்லையா? அவருக்கு ஏலுமான வரைக்கும் ஒனக்கு எல்லாம் செய்து தந்துதான் ஈக்கிறார். போன மாசம் கூட நீ கேட்ட போன் வாங்கி தரல்லயா?'' என்று கதீஜா கோபம் தீர கத்தினாள்.

''நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்க போறதில்ல. நான் இனிமேல் படிக்கல்ல. சம்பாதிக்கணும் இதுதான் ஏண்ட முடிவு'' என்று கூறிவிட்டு அறைக்குள் வேகமாக நுழைந்தான்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு கதீஜா வீட்டு வேலைகளை முடித்துவிட்டு லுஹர் தொழுகைக்காக தயாரானபோது அஸ்லம் அப்பொழுதுதான் விழித்தெழும்பினான். அவசர அவசரமாக முகம், கால் கழுவி விட்டு தேநீரைக் குடித்தும் குடிக்காமலுமாக உம்மாவிடம் சென்றான்.

''உம்மா எனக்கு நூறுவா ஒன்டு தாங்க.''



''ஏன் மகன் எதுக்கு சல்லி?''

''இப்ப தர ஏலுமா ஏலாதா?''

''ஏலா... முடியாது மகன். நீங்க கெட்ட வழில போறத எனக்கு பார்த்துக் கொண்டு அதுக்கு உடந்தயா இருக்க மாட்டன்'' என்றார் கதீஜா.

அஸ்லமுக்கு கோபத்தின் எல்லை மீறிவிட்டது. அதன் விளைவாக அவன் அருகில் இருந்த அஸ்மா ஆசையாக வளர்த்து வந்த பூச்செடியை சாடியுடன் எடுத்து நொறுக்கினான்.

''இனிமேல் இந்த வீட்டில் நான் இருக்க மாட்டேன். எங்கயாவது போறேன்.''

''மகன்... மகன்'' என்று கதீஜா பின்னாலே ஓடினார். அவன் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அஸ்லம் மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் உம்மா கதீஜா.

நடந்தது அனைத்தையும் அஸ்மாவே தந்தையிடம் கூறி முடித்தாள். அம்ஜத் மகனை நினைத்து புழுவாய் துடித்தார். வேதனையில் அவர் முகம் வெம்பிவிட்டது. சற்று நேரம் வீட்டில் நிசப்தம் பரவியது.

''அம்ஜத்... அம்ஜத்...'' என்று கூக்குரல் வீட்டுக்கு வெளியே... சத்தத்தால் அதிர்ந்து போன அம்ஜத் வெளியே சென்று பார்த்தார். வெளியே ஹாரூன் நின்று கொண்டிருந்தார். ''உங்கட மகன் ஊருல உள்ள பொடியன்மாரோட சேர்ந்து போதைப்பொருள் பாவிச்சதுக்காக பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போறாங்க'' என்றார் மூச்சு விடாமல்.

அம்ஜத்துக்கு இதயத்தில் உளியால் யாரோ குத்தியது போன்றிருந்தது. கதீஜா ஓலமிட்டு அழுதாள்.

''நல்லா இருந்த மகன் இன்று பொலிஸ் பிடிச்சுட்டு போற அளவுக்கு ஆளாகிட்டானே'' என கதறினார்.

உடனே விரைகிறார் அம்ஜத் பொலிஸ் நிலையத்துக்கு. மகனை விடுவிக்குமாறு மன்றாடுகிறார். முயற்சி பலனளிக்கவில்லை. தண்டப் பணம் கட்ட வேண்டும். இல்லை என்றால் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் ஒப்படைத்து விடுவதாக பொலிஸ் அதிகாரி கூறிவிட்டார். அம்ஜத்துக்கு தண்டப் பணம் கட்டுமளவு வசதி இல்லை. தனது மகனை தண்டப் பணம் கட்டி மீட்டு, மீண்டும் அவன் அதே வழியில் செல்வதை விட சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்ப்பது நல்லது என எண்ணி தனது இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு அதனை பொலிஸாரிடம் கூறிவிட்டுச் சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2015 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறு கடந்த ஜனவரி மாதம் வெளியாகியது. இதில் தேசிய மட்டத்தில் முஸ்லிம் மாணவர்கள் சாதனைகளை வெளிப்படுத்தியிருப்பது பெரும் நம்பிக்கையினை தருகிறது, அல்ஹம்துலில்லாஹ். இப்பெறுபேற்றின் பிரகாரம் வர்த்தகப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடத்தை குருணாகல் மலியதேவ ஆண்கள் கல்லூரி மாணவன் ஆகில் முஹம்மத், உயிரியல் விஞ்ஞான பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை புத்தளம் ஜனாதிபதி விஞ்ஞானக் கல்லூரி மாணவன் முஹம்மத் முன்சிப், பொறியியல் தொழிநுட்ப பிரிவில் தேசிய மட்டத்தில் ஐந்தாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் கிரி/கெகுணகொல்ல தேசிய பாடசாலை மாணவன் முஹம்மத் அகீல் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இம்மாணவர்களின் சாதனை தொடர்பாக அறிவதற்கு அகரம் சஞ்சிகை சந்திப்பொன்றை மேற்கொண்டது.

சந்திப்பு : அயாத் அஹமத்

# "வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தேன்"

## -வர்த்தக பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற ஆகில் முஹம்மத்-

**அகரம்:** உங்களைப் பற்றிய அறிமுகத்தைத் தாருங்கள்?

**ஆகில் முஹம்மத்:** எனது தந்தை ஸலாஹுதீன் பழீல் முஹம்மது. அவர் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தந்தையின் பிறப்பிடம் குருணாகல் தெலியா கொன்ன. தாய் ஹைருல் வஸீரா, வீட்டுத் தலைவியாக இருக்கிறார். அவர் ரிதீகம, ரமுக்கந்தனையை பிறப்பிடமாகக் கொண்டவர். சகோதரி பர்ஹத் பஸ்ரின், தற்போது சட்டத்துறையில் உயர் கல்வி கற்று வருகிறார். எனது ஆரம்பக் கல்வியை வயம்ப ரோயல் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை ரோயல் இன்டனெஷனல் கல்லூரியிலும் உயர் கல்வியை மலியதேவ ஆண்கள் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டேன்.

**அகரம்:** உயர் தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் நீங்கள் முதலிடம் பெற்றிருக்கிறீர்கள். இந்தப் பெறுபேற்று செய்தி உங்களுக்கு கிடைத்தபோது உங்களுடைய மனோநிலை எவ்வாறு இருந்தது?

**ஆகில் முஹம்மத்:** சந்தோஷமாக இருந்தது. முதலில் எனது பெறுபேற்றை சகோதரிதான் இணைய வழியாக அறிந்தார். செய்தியை என்னிடம் சொன்னதும் நான் முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினேன். உண்மையில் மாவட்டத்தில் முதலிடம் பெறுவேன் என்ற நம்பிக்கை மனதில் இருந்தது. எனினும், தேசிய மட்டத்தில் முதலிடம் பெறுவேன் என நான் நினைக்கவில்லை. எனினும் கிடைத்த இந்த பெறுபேற்றினால் நான் அதிகம் சந்தோஷப்பட்டேன்.



**அகரம்:** நீங்கள் பரீட்சைக்கு தயாரான விதம் தொடர்பாக குறிப்பிடுங்கள்?

**ஆகில் முஹம்மத்:** நான் அதிகமாக சுய கற்றலில் ஈடுபடுவேன், வகுப்புகளில் கற்றுத்தரும் விடயங்களை அத்தினமே மீட்டிக் கொள்வேன். நண்பர்களுடன் அதிகம் குழுவாக கற்கும் பழக்கம் இருந்தது. ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பயிற்சிகள் அதிகம் செய்வேன்.

**அகரம்:** உங்களது பொழுதுபோக்கு பற்றி குறிப்பிடுங்கள்?

**ஆகில் முஹம்மத்:** நான் அதிகம் செஸ் விளையாடுவேன். விளையாட்டுக் கழகங்களிலும் இருக்கிறேன். இது தவிர, தொலைக்காட்சி பார்ப்பது, பத்திரிகை, புத்தக வாசிப்பு என்பனவும் எனது பொழுதுபோக்கு விடயங்கள்தான்.

**அகரம்:** உங்களது எதிர்கால இலட்சியம்?

**ஆகில் முஹம்மத்:** இன்ஷா அல்லாஹ், எதிர்காலத்தில் கணக்கியல் துறையில் உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்பது எனது ஆசை.

**அகரம்** பரீட்சைகளுக்குத் தோற்றி சாதிக்க இருக்கும் மாணவ சகோதரர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**ஆகில் முஹம்மத்** பரீட்சை என்பது எப்போதும் சந்தோஷமாக எதிர்கொள்ள வேண்டிய விடயம். அதனை நாங்கள் அழுத்தமாக மாற்றிக் கொள்ளக் கூடாது. அதனை திட்டமிட்ட முறையில் நாம் எதிர்கொள்ளும் வகையில் எமது கற்றலை அமைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒரு பரீட்சையை எதிர்நோக்க இருக்கிறோம் என்ற மனோநிலையுடன் கற்கும்போது எமது கற்றல் செயற்பாடுகள் வேகமாக அமையும் என்பது எனது அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம்:** உங்களைப் பற்றி சிறிது அறிமுகப்படுத்துங்கள்?

**முஹம்மத் முன்சிப்:** நான் புத்தளத்தைச் சேர்ந்தவன். ஜனாதிபதி விஞ்ஞானக் கல்லூரியில் கற்றேன். எனது தந்தை ஜவ்பர் முஸாதிக். அவர் ஒரு கணித பாட ஆசிரியர். தற்போது மணல்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக சேவையாற்றுகிறார். தாய் பாத்திமா றிஸ்வியா. இவரும் புத்தளம் ஸாஹிரா கல்லூரியில் கணிதபாட ஆசிரியையாக சேவை



# "தொடரான முயற்சியும் பயிற்சியும் வெற்றிக்கான முதலீடுகளாகும்"

## விஞ்ஞான பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற முஹம்மத் முன்சிப்

புரிகிறார். எனது ஒரு சகோதரி பாத்திமா மஹாரா; அவர் விஞ்ஞானத் துறையில் உயர் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்.

**அகரம்:** உயர் தரப் பரீட்சையில் தேசிய மட்ட சாதனையாளர் நீங்கள். அந்தப் பெறுபேறு உங்களை வந்தடைந்தபோது உங்களது மனோநிலை எவ்வாறு இருந்தது?

**முஹம்மத் முன்சிப்:** எனது பெறுபேற்றை எனக்கு முதலில் அறிவித்தவர் என்னுடைய வகுப்பு உற்ற நண்பன் சிந்துஜன்தான். அவருக்கும் இந்த இடத்தில் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். பெறுபேறுகளை நான் இணையத்தின் ஊடாக அதிகாலையில்தான் பார்த்தேன். சந்தோஷமாக இருந்தது. பெறுபேற்றை கேட்டவுடன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி, இரண்டு ரக்அத்துக்கள் தொழுதேன். இது எனது வாழ்வில் மறக்க முடியாத தருணங்கள் தான்.

**அகரம்:** க.பொ.த. சாதாரண தரம், புலமைப் பரிசில் என்பவற்றில் உங்களது பெறுபேறுகளைக் குறிப்பிடுங்கள்?

**முஹம்மத் முன்சிப்:** புலமைப் பரிசிலில் நான் 182 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடமும் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழியில் நான்காம் இடமும் பெற்றேன். சாதாரண தரப் பரீட்சையிலும் 9 ஏ சித்திகளைப் பெற்றிருந்தேன்.

அகரம்: நீங்கள் பரீட்சைக்கு தயாராகும் முறையினைக் குறிப்பிடுங்கள்?

**முஹம்மத் முன்சிப்:** உயர் தரப் பரீட்சைக்கு நான் திட்டமிட்ட முறையில் தயாரானேன். அதாவது, எனக்கு இந்தப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஏ தர சித்தி அடைய வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. அவ்வாறே வைத்திய பீடத்திற்கு தெரிவாக வேண்டும் என்ற இலட்சியமும் இருந்தது. எனவேதான், நான் பாடசாலைக்கு தவறாமல் செல்வேன், பாடசாலை வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்களில் அக்கறையுடன் கலந்துக் கொள்வேன். ஒவ்வொரு நாளும் கற்பிப்பதை உடனே மீட்டிக் கொள்வேன். குறிப்பு எழுதுவதில் ஒரு போதும் குறைகளை வைக்க மாட்டேன். தெளிவற்ற பகுதிகள் இருந்தால் உடனே அவற்றை ஆசிரியர்களிடம் கேட்டு தெளிவை பெற்றுக் கொள்வேன்.

**அகரம்:** உங்களது பொழுதுபோக்கு பற்றி சொல்லுங்கள்?

**முஹம்மத் முன்சிப்:** கிரிக்கெட் விளையாடுவேன்; அதிகமாக புத்தகங்களை வாசிப்பேன். குறிப்பாக, அல்ஹஸனாத், அகரம் என்பன தவறாமல் வாங்கிக் கொள்வோம். அவற்றை உடனுக்குடன் வாசிக்கும் பழக்கம் இருந்தது. இணையத்தில் அதிகமாக புதிய தகவல்களை தேடுவதிலும் கற்பதிலும் நேரங்களை செலவிடுவேன்.

**அகரம்:** நீங்கள் இலங்கை இஸ்லாமிய மாணவர் அமைப்பில் (ஜம்இய்யா) ஒரு முக்கிய செயற்பாட்டாளர் என அறிகிறோம். இது பற்றிக் கூறுங்கள்?

**முஹம்மத் முன்சிப்:** உண்மையில், எனது கல்வியில் பங்களிப்புச் செய்த காரணிகளில் ஜம்இய்யாவுக்கும் பங்கிருக்கிறது. கல்வியோடு மார்க்கத்தை கற்றுத் தந்தது ஜம்இய்யாதான். நான் சிறு வயதியேயே ஜம்இய்யாவின் அஸாபிர் பகுதியில் இணைந்து செயற்பட்டேன். பின்பு ஜம்இய்யாவுடன் இணைந்து இஸ்லாத்தைக் கற்பதிலும் இஸ்லாமிய பணிகளில் ஈடுபட்டும் வருகிறேன்.

**அகரம்:** எதிர்கால இலட்சியம் பற்றி?

**முஹம்மத் முன்சிப்:** வைத்தியத் துறையில் ஓர் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும். இதன் ஊடாக சமூகத்திற்கும் குறிப்பாக, புத்தளம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது எனது ஆசை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம்:** உங்களைப் பற்றி சொல்லுங்கள்?

**முஹம்மத் அகீல்:** எனது தந்தை அப்துர் ரஹ்மான்; அவர் இலங்கை போக்குவரத்து சபையின் ஓய்வு பெற்ற அதிகாரி. தாய் பௌஸியா; அவர் ஓர் ஆசிரியர். தற்போது அறக்கியால முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றுகிறார். அக்மல் முஹம்மத், (NISD) ஹாதிம் முஹம்மத், பாத்திமா அஸ்னா, (கல்வியியற் கல் லூரி) அன்ஸபா ஷெரப் ஆகியோர் எனது சகோதரர்கள்.



**அகரம்:** உங்களது பரீட்சைப் பெறுபேறு கரங்க ளில் கிடைத்த நாளை நினைவுபடுத்துங்கள்?

**முஹம்மத் அகீல்:** பெறுபேற்றினை இணையத்தின் மூலம் அறிந்து கொண்டபோது மகிழ்ச்சியடைந் தேன். உடனே அல்லாஹ்வுக்கு இரண்டு ரக்அத்துக்

# "சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உறுதியாக இருக்க வேண்டும்"

### -பொறியியல் தொழிநுட்ப பிரிவில் தேசிய மட்டத்தில் ஐந்தாம் இடம்பெற்ற முஹம்மத் அகீல்-

கள் தொழுது நன்றியினை தெரிவித்துக் கொண்டேன். எனது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் என அனைவரும் சந்தோஷமடைந்தார்கள். அன்றைய தினம் நானும் எனது உம்மாவும் நோன்பு நோற்றிருந் தோம். நிறைய பிரார்த்தனைகளும் செய்திருந்தோம். அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் வெற்றியைத் தந் திருக்கிறான்.

**அகரம்:** உங்களது வெற்றிக்கு பங்களிப்புச் செய்த வர்களை நினைவுபடுத்துங்கள்?

**முஹம்மத் அகீல்:** ஆரம்பமாக அல்லாஹ்விற்கு நன்றிகளைத் நான் தெரிவிக்க வேண்டும். அத்தோடு, எனது வெற்றியில் பெற்றோர், ஆசிரியர்கள், எனது குடும்ப உறுப்பினர்கள் என பலரும் உதவி செய்தவர் கள். குறிப்பாக, எனது ஆரம்பக் கல்வியினை நான் கல்கமுவ, கல்லாவ முஸ்லிம் வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டேன். அப்போது எனக்கு கற்பித்த ஆசிரியர்களையும், அதனைத் தொடர்ந்து உயர் தரம் வரை கற்பித்த கெகுணகொல்ல தேசிய பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பிரார்த்தனையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அகரம்:** உங்களது ஓய்வு நேரத்தை எப்படி கழிப் பீர்கள்?

**முஹம்மத் அகீல்:** விளையாட்டு, புத்தகம் வாசித் தில் போன்றவை எனக்கு விருப்பமான விடயங்கள். குறிப்பாக, பாடசாலை கிரிக்கெட், கால்பந்தாட்ட அணிகளில் நான் தலைவராகவும் செயற்பட்டிருக் கிறேன்.

**அகரம்:** உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

**முஹம்மத் அகீல்:** நான் தகவல் தொழிநுட்ப துறை யில் உயர் கல்வியைப் பெறுவதுடன் அத்துறையின் ஊடாக உயர்ந்த ஒரு பதவியை அடைந்து சமூகத்திற்கு சேவை புரிய வேண்டும் என்பதுதான்.

**அகரம்:** பரீட்சைகளை எதிர்நோக்கும் மாணவர் களுக்கு நீங்கள் சொல்லும் செய்தி?

**முஹம்மத் அகீல்:** முதலில் அல்லாஹ்வுடன் நெருக் கமான உறவைப் பேணிக் கொள்ள வேண்டும். அதி கமதிகம் பிரார்த்தனை செய்ய வேண் டும். அத்தோடு, பாடங்களை திட்டமிட்டு மீட்டி, எதிர் நோக்கும் பரீட்சையில் எமது இலக்கினையும் வரைய றுத்து, சாதிக்க முடியும் என்ற நம்பிகையுடன் செயற் பட வேண்டும். அப்போது எமக்கான வெற்றி நிச்ச யம் கிடைக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 'ஸ்ரமிக்க சுரெக்கும'

- 2016 ஜனவரி மாதத்தில் 'ஸ்ரமிக்க சுரெக்கும' எனப்படும் புலம்பெயர் தொழிலாளர் குடும்ப நலனோம்பல் வேலைத்திட்டம் சகல பிரதேச செயலகங்களிலும் இடம்பெற்றது.
- உங்கள் குடும்பத்திலுள்ள எவரேனும் வெளி நாட்டில் தொழில் புரிவதாயின், உங்கள் குடும் பத்தின் பின்வரும் தகவல்கள் பிரதேச செயல கத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
  - வெளிநாடு சென்றுள்ள உறவினரின் தகவல்கள்
  - பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி விபரங்கள்
  - உங்கள் குடும்ப வாழ்வாதார விபரங்கள், சுகாதார மட்டம்
- இச்செயற்திட்டத்தை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் செயற்படுத்துகின்றது.

## கோல்டன் குளோம் விருது




- 2016 ஜனவரியில் 73 ஆவது கோல்டன் குளோம் விருது அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இடம் பெற்றது.
- இதில் 2015 ஆம் ஆண்டு திரைக்கு வந்த சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த தொலைக்காட்சி தொடர்களுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டன.
- இவ்விருது விழாவில் சிறந்த திரைப்படத்திற் கான விருதை தி ரெவனென்ட் திரைப்படமும் சிறந்த இயக்குநருக்கான விருதை தி ரெவனென்ட் திரைப்படத்தை இயக்கிய அலி ஜான்ட்ரோவுக் கும் சிறந்த நடிகருக்கான விருதை தி ரெவனன்ட் திரைப்பட நடிகர் லியானர்டோ டிகாப்ரியோ வும் பெற்றனர்.
- ஒஸ்கார் விருதுக்கு அடுத்தபடியாக மிகவும் உய ரிய விருதாக கருதப்படும் விருது இதுவாகும்.




திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

## இலங்கை - பாகிஸ்தான் ஒப்பந்தங்கள்



- 2016 ஜனவரியில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜய மொன்றை இலங்கைக்கு மேற்கொண்டார்.
- இதன் பிரகாரம் இரு தரப்பினரும் பின்வரும் எட்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச் சாத்திட்டனர்.
  - விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு
  - சுகாதாரத்துறை ஒத்துழைப்பு
  - பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் நிதி மோசடி தொடர்பான நிதி புலனாய்வு பரிமாற்ற ஒத்துழைப்பு
  - கலாசார ஒத்துழைப்பு
  - வர்த்தக ஒத்துழைப்பு
  - புள்ளி விபரவியல் தரவுகளை பகிர்ந்து கொள் ளுதல் தொடர்பான ஒத்துழைப்பு
  - இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான ஒத்துழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ❖ உலக வெப்பமயமாதல் உயர்வை 2 டிகிரி செல்சியஸால் குறைப்பதற்கு உலகத் தலைவர்கள் இணக்கப்பாட்டினை வெளியிட்ட Cop 21 சம்மேளனத்தின் நோக்கத்தை நிறைவேற்ற இலங்கையின் பங்களிப்பை வழங்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் நீண்டகாலத் திட்டமே Sri Lanka Next ஆகும்.
- ❖ இது 2016 ஜனவரி மாதம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதுடன் இச்செயற்திட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் செயற்படுத்தப்படுகிறது.
- ❖ இது நிலப் பசுமைப் புரட்சி எனவும் அழைக்கப்படுகிறது.





- ❖ 2016 ஜனவரியில் ஐதரசன் அணுகுண்டுச் சோதனை ஒன்றை வெற்றிகரமாக முடித்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.
- ❖ வரலாற்று ரீதியான ஐதரசன் குண்டின் கச்சிதமான வெற்றியுடன் முன்னேற்றமடைந்த அணுகுண்டு தேசங்களுடன் வடகொரியாவும் இணைந்து கொள்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ இச்சோதனை அறிவிப்பை அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கடுமையாக கண்டித்ததுடன் ஐ.நா. பாதுகாப்பு சபையும் ஆராய்ந்துள்ளது.
- ❖ இதனால் வடகொரியாவின் புன்கியிரி அணுசோதனைத் தளத்திற்கு அருகில் 3.1 ரிச்டர் அளவு பூகம்பம் ஒன்று பதிவாயுள்ளது.

## க.பொ.த. உயர் தரப் பரீட்சை - 2015

- க.பொ.த. உயர் தரப் பரீட்சை 2015 முடிவுகளின் பிரகாரம் மாவட்ட ரீதியில் யாழ்ப்பாண மாவட்டமும் மாகாண ரீதியில் வட மாகாணமும் முதலிடம் பெற்றுள்ளன.
- வடக்கு மாகாணம் 65.23 சதவீத சித்திகளைப் பெற்றுள்ளதோடு, மாவட்ட ரீதியில் யாழ்ப்பாண மாவட்டம் 66.32 சதவீத சித்திகளையும் பெற்றுள்ளது.
- இதன் பிரகாரம் ஆகக் குறைந்த நிலையில் வடமத்திய மாகாணம் 59.56 சதவீத சித்திகளையும் பொலன்னறுவை மாவட்டம் 57.76 சதவீத சித்திகளையும் பெற்றுள்ளன.

## ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவி



- ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் பாங் கீ மூனின் பதவிக் காலம் 2016 டிசம்பரில் முடிவடைய உள்ளதால் புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கை 2016 ஜூலையில் ஆரம்பிக்கப்பட உள்ளது.
- கடந்த எழுபது வருடங்களாக பதவி வகித்த அனைத்து ஐ.நா. பொதுச் செயலாளர்களும் ஆண்கள் என்பதால் பெண்களை பரிந்துரைப்பதற்கு பரிசீலிக்குமாறு விசேடமாக கோரப்பட்டுள்ளது.
- வழமையாக பிராந்திய அடிப்படையில் சுழற்சி முறையிலேயே பொதுச் செயலாளர் பதவி தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இதன் பிரகாரம் அடுத்து கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஒருவரே அந்தப் பதவிக்குத் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவர்த்தன அட்டவணையில் புதிய மூலகங்கள்

- 2015 டிசம்பரில் ஆவர்த்தன அட்டவணையில் ரஷ்யா மற்றும் அமெரிக்க இரசாயனக்குழு ஒன்று புதிதாக கண்டறிந்த நான்கு இரசாயன (115, 117, 118, 113) மூலகங்களை இணைத்ததன் மூலம் இந்த அட்டவணையின் ஏழாவது வரிசை பூர்த்தியாகி உள்ளது.
- அமெரிக்காவை மையமாகக் கொண்டு செயற்படும் இரசாயன அளவீட்டு முறைகளை நிர்வகிக்கும் சர்வதேச தூய மற்றும் பயன்பாட்டு இரசாயனவியல் ஒன்றியத்தினால் IUPAC (International Union of Pure and abblied Chemistry) இந்த நான்கு மூலகங்களும் உறுதி செய்யப்பட்டன.
- 2011 ஆம் ஆண்டு 114 மற்றும் 116 மூலகங்கள் இணைக்கப்பட்ட பின்னர் ஆவர்த்தன அட்டவணையில் புதிய மூலகங்கள் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ரஷ்யாவின் இரசாயன விஞ்ஞானி டிமிட்ரி மெடலீங் 1869 ஆம் ஆண்டு இரசாயன மூலகங்களை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் வரிசைப்படுத்த முயன்று மூலகங்களின் அணுநிறைகளை அடிப்படையாகக் கொண்டு முதலாவது ஆவர்த்தன அட்டவணையை உருவாக்கினார்.

## துப்பாக்கி கட்டுப்பாடு

- 2016 ஜனவரியில் அமெரிக்க காங்கிரஸின் எதிர்ப்பையும் மீறி துப்பாக்கிகளால் ஏற்படத்தப்படும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறைகளை ஜனாதிபதி பராக் ஒபாமா அறிமுகப்படுத்தியுள்ளார்.
- 2001 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அமெரிக்க மண்ணில் வைத்து துப்பாக்கிகளால் ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புக்கள் 406, 496 ஆகும்.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 07

### தலைப்பு : மான் கூட்டம்

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு இறுவட்டுக்கள் (DVD) வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**2016 பெப்ரவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09

## தரமிருந்தும் இடம்பிடிக்க தவறியவை

எம்.ஜே.எம். கைஸ்
இ/கஹவத்த மு.வி.
கஹவத்த

ஸாஜிதா றிஸ்வி
அல் முஃமினாத் அ.க.

மிப்லா முஜிபுர் ரஹ்மான்
கல்-எளிய மு.மகளிர் கல்லூரி

எம்.எஸ்.எப். ஸரபா
க/தெல்தெனிய மு.வி.
றஜவல்ல

எம்.ஜே.எம். ஸம்றத்
இ/கஹவத்த மு.வி.

அரபா அஸ்வாட்
மா/ஆமினா தேசிய பா.
மாத்தளை

ஏ.எஸ். முபாஸிறா

பொ/அல் அமீன் மு.வி.
வெளக்கந்த

எம்.எப். ஆயிஷா ஹஸனாத்
கம்/அல் அஸ்ஹர ம.க.
திஹாரிய

ஸல்மா பர்ஹத்
கம்/அல் அஸ்ஹர ம.க.
திஹாரிய

அப்ரா புஷ்றா
கல்-எளிய மு.ம.க.

பாத்திமா இபாமா
பெலற்த முஸ்லிம் வி.
அகலவத்த

பாத்திமா ஸாஜிதா
தாருஸ் ஸலாம் மு.வி.
சம்மாந்துறை

ஸப்னா நிஸவ்விர்
பெலற்த முஸ்லிம் வி.
அகலவத்த

ஸமீர சாதிம்
துலகஸ்பிடிய மு.ம.வி.
அரணாயக்க

அப்றா வஜீறா
கல்-எளிய மு.ம.க.

ஸமா இர்சாத்
மா/ஆமினா தேசிய பா.
மாத்தளை

பாத்திமா ஹனா
கு/ஹிஸ்புல்லாஹ ம.க.
தெலியாகொன

முஹம்மத் அறபாத்
கொ/அல் ஹிக்மா கல்லூரி
கொழும்பு 12

அர்சாத் அஹமட்
அல்/ஹுமைசறா ம.க.
பேருவளை

பாத்திமா றிஸ்னா
அல் ஹுதா.மு.ம.வி
ரிதீகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11

பகுதி : 05

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்


எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
மினுவாங்கொட, கம்பஹா வலயம்.
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்


## கணினியில் காணப்படும் வழமையான Icon களை மாற்றி புதிய கவர்ச்சியான Icon களாக மாற்றியமைத்தல்

கணினியின் பணிசெயல் முறைமை ஆரம்ப காலத்தில் CLI (Command line Interface) ஆக காணப்பட்டது. அதன்போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதாயின் keyboard மூலம் கறுப்புத் திரையில் தட்டச்சு செய்தே பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், தற்போது பணிசெயல் முறைமையானது GUI(Graphical User Interface) எனப்படும் படங்களாலான முகத்தளத்தைக் கொண்டுள்ளது. அனைத்து Command களையும் Icon களாக அது வடிவமைத்துள்ளது. எனவே, இது பாவனையாளர்களுக்கு மிகவும் இலகுவாகவும் அதே நேரம் கவர்ச்சியாகவும் அமைந்துள்ளது.

கணினியின் System Software (முறைமை மென்பொருள்) ஐ உருவாக்குகின்ற ஒவ்வொரு நிறுவனமும் (உ+ம்: Apple, Microsoft) ஒவ்வொரு Command களுக்கும் நிறுவனம் தீர்மானிக்கின்ற Icon களையே உருவாக்கியிருக்கின்றது.



Apple Computer  Microsoft Computer  Linux Computer


எனினும், பயனருக்கு தேவை ஏற்படின் பயனர் விரும்புகின்ற Icon களை மாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. விண்டோஸ் 7 பாவனையிலுள்ளகணினிகளில்Icon களைமாற்றிக்கொள்வதற்கான படிமுறை பின்வருமாறு அமைகின்றன:

படி 01

முதலில் சுட்டியை Desktop இல் வைத்து வலது பக்கத்தை click செய்ய வேண்டும். பின்னர் தோன்றும் விண்டோவில் (படம் 01) personalize ஐ தெரிவு செய்ய வேண்டும்.




படம் 1



படம் 2



படம் 3

தெரிவு செய்த பின்னர் தோன்றும் விண்டோவில் Change Desktop Icon என்ற Link ஐ click செய்ய வேண்டும். அப்போது தோன்றும் விண்டோ படம் 3 இல் காட்டப்பட்டுள்ளது. அப்போது நாம் மாற்ற நினைக்கும் click ஐ மேலே இருந்து தெரிந்து பின்னர் அந்த விண்டோவில் காணப்படும் Change Icon என்ற button ஐ click செய்ய வேண்டும். அப்போது பின்வரும் விண்டோ காட்சியளிக்கும் (படம் 04). இந்த விண்டோவில் 212 Icon கள் காணப்படுகின்றன.

அதில் ஏதாவதொன்றை தெரிவு செய்து OK ஐ Click செய்தால் குறிப்பிட்ட படம் மாற்றம் பெறுவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கண்டு கொள்ள முடியும்.(படம் 05) நாம் செய்ததை விடுத்து ஆரம்பத்தில் இருந்த விதமே கொண்டு வர வேண்டுமாயின் Restore என்ற Button ஐயும் click செய்ய வேண்டும்.



படம் 4



படம் 5

Folder ஒன்றினுடைய Icon ஐ மாற்றியமைத்தல்

Folder ஒன்றினுடைய Icon ஐ மாற்றி அமைக்கும் முறை மேற்கூறிய முறையிலும் வித்தியாசமானதாகும். இம்முறையை அடுத்த Icon களை மாற்றுவதற்கும் பயன்படுத்த முடியும்.

படிமுறை

1. குறித்த கணினி யுகம் என்ற Folder இன் மேல் சுட்டியை வைத்து Left click செய்யப்பட்டுள்ளது. அப்போது வரும் விண்டோவில் properties ஐ தெரிவு செய்ய வேண்டும். (படம் 06)
2. properties விண்டோவில் காணப்படும் customize என்ற button ஐ தெரிவு செய்வதன் மூலம் (படம் 07) ஒரு விண்டோ தோற்றம் பெறும்.
3. அதன் உள்ளடக்கத்தில் காணப்படும் Change Icon என்ற button ஐ தெரிவு செய்து எமக்குத் தேவையான ஒரு Icon ஐ மாற்றிக் கொள்ள முடியும். (படம் 08)
4. Folder Type இல் இருந்த கணினி யுகம் இப்போது கணினி வடிவில் Icon ஒன்றினைப் பெற்றிருப்பதைக் காணலாம். (படம் 10)


பயிற்சி:

i. பொதுவாக கணினியில் பயன்படுத்தும் Icon கள் ஐந்தினைப் பெயரிட்டு வரைந்து காட்டுக.


ii. கணினியில் Icon களைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii. நாம் எமக்குத் தேவையான Icon களை நிறுவுவதால் ஏற்படும் நன்மை ஒன்றினையும் தீமை ஒன்றினையும் மாணவர்களுடன் கலந்துரையாடி எழுதுக.


5.




படம் 6



படம் 7



படம் 8



படம் 9



கணினி யுகம் படம் 10

## சீனாவில் உலகின் மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப மையம்

- தகவல் தொழில்நுட்ப மென்பொருள் ஏற்றுமதித் துறையில் இந்தியாவிற்கு சவாலாகும் மாபெரும் இலக்குடன் சீனா களமிறங்கியுள்ளது.
- சீனாவின் வடகிழக்கு மாகாணமான லயோனிங்கில் உள்ள டாலியான் என்ற கடற்கரை நகரில் உலகின் மிகப் பெரிய மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றிற்கான கட்டுமானப் பணியை அது துவக்கியுள்ளது.
- இது சீனாவின் வெறும் சிலிகான் பள்ளத்தாக்கு மட்டுமல்ல, முதல் தர பணிச் சூழலுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப நகரம் என்று டாலியான் நகர மேயர் பெருமையுடன் கூறுகிறார். இந்த மையம் 40 கி.மீ. பரப்பளவில் கட்டப்படுவது தான் இதன் சிறப்பம்சமாகும்.
- லியான் டியாண்டி தகவல் தொழில்நுட்ப மையத்தை உருவாக்க 15 பில்லியன் யுவான்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இந்த முதலீடுகளை சீன மற்றும் ஹாங்காங் நிறுவனங்கள் சேர்ந்து செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



68 ஆவது சுதந்திர தினம்

# "என்னைக் காத்த இரத்தமே!"

## இலங்கையின் சுதந்திரத்திற்காக தியாகம் செய்த முஸ்லிம் தாய்



எமது தாய் நாடான இலங்கை தற்பொழுது தனது 68 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பல பாகங்களிலும் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவம் என்று இன வேறுபாடின்றி அனைவரும் ஒரு தாய் மக்கள் போன்று நாட்டின் தேசக் கொடியை ஏற்றி மதித்து வருகின்றனர்.

இலங்கை வரலாற்றில் ஏனைய சமூகத்தவர்களைப் போன்று இலங்கை முஸ்லிம்களும் மகத்தான ஓரிடத்தைப் பெற்றுள்ளனர் என்றால் இதற்குக் காரணம், அவர்கள் இந்நாட்டுக்குச் செய்துள்ள தியாகங்களாகும். அவ்வாறு நாட்டுக்காக தனது உயிரை தியாகம் செய்த ஒரு முஸ்லிம் பெண்மணியின் வரலாற்றை இங்கு நோக்குவோம்.

ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கண்டியில் இரண்டாம் இராஜசிங்கன் என்ற பெயருடைய ஒரு மன்னன் ஆட்சி செய்தான். அவனது காலத்தில் இலங்கையின் கரையோரத்தைப் போர்த்துகேயர் ஆண்டனர். அவர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கும் மன்னன் இராஜசிங்கனுக்குமிடையே போர் மூண்டது. அப்போரில் தோல்வி அடைந்த மன்னன் ஓட ஆரம்பித்தான்.

ஊவா மாகாணத்தில் உள்ள பங்கரகம்மண என்ற கிராமத்தில் நுழைந்த மன்னன் அங்கிருந்த ஒரு பெரிய பலா மரத்தைக் கண்டான். அதில் ஓர் ஆள் நுழையக் கூடியளவுக்கு பெரிய பொந்தொன்று தென்பட்டது. அதனுள் மன்னன் ஒளிந்து கொண்டான். அதேசமயத்தில், மரத்தின் அருகில் முஸ்லிம் பெண்ணொருத்தி பசுவிலிருந்து பால் கறந்து கொண்டிருந்தாள். அவள் மன்னன் மரப்பொந்தினுள் ஒளிவதைக் கண்டாள்.



மன்னனைத் துரத்தி வந்த போர்த்துக்கேயர் மன்னன் திடீரென மறைந்ததைக் கண்டு ஆத்திரம் கொண்டனர். அங்கும் இங்கும் தேடினர். பக்கத்தில் பால் கறந்து கொண்டிருந்த முஸ்லிம் பெண்ணைக் கண்டனர். அவளை அணுகி அவர்கள், 'இங்கு வந்த இராஜசிங்கன் எங்கே?' என்று அதட்டிக் கேட்டனர்.

அவள் பயத்தாள், நடுங்கினாள். முக்காடை சரிப்படுத்துக் கொண்டாள். போர்த்துக்கேயப் படைவீரர்கள் மீண்டும் அதட்டிக் கேட்டனர். 'கண்டேன்' என்று சொல்லி மன்னனைக் காட்டிக் கொடுக்கவோ, 'காணவில்லை' எனக் கூறி பொய் சொல்லவோ அவள் விரும்பவில்லை. மௌனமாகவே இருந்தாள். அரசன் ஒளிந்திருந்த இடத்தை அவர்களால் அறிய முடியவில்லை. போர்த்துக்கேய வீரர்கள் பெருங்கோபம் கொண்டனர். பொறுமையிழந்த அவர்கள் ஈவிரக்கமின்றி அப்பெண்ணைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்தனர்.

போர்த்துக்கேய வீரர்கள் அங்கிருந்து சென்ற பின் மன்னன் இராஜசிங்கன் வெளியே வந்தான்; இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த அந்த முஸ்லிம் பெண்ணைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். 'எனக்காக இவள் தன் உயிரைக் கொடுத்து விட்டாளே!' என்று பெருந்துயர் கொண்டான். அவள் செய்த உயிர் தியாகத்தை "மா ரெக லே" (என்னைக் காத்த இரத்தமே) என மெச்சினான். அந்த பெண்மணியின் தியாகத்தை அவனால் மறக்கவே முடியவில்லை. சில நாட்களின் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜசிங்கன் மீண்டும் அரசனானான். அந்த முஸ்லிம் பெண்மணியின் நினைவாக 'பங்கரகம்மன' என்று பெயர் சூட்டி அந்தக் கிராமத்தையே அவளுடைய உறவினர்களுக்குப் பரிசளித்தான்.

இந்த வரலாற்றுச் சம்பவத்தைச் செவிமடுக்கும் போது மெய் சிலிர்க்கின்றதல்லவா? தனது நாட்டின் ஆட்சியாளர்களை வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக ஒரு முஸ்லிம் பெண்மணி செய்த தியாக வரலாற்றைப் பார்த்தீர்களா? நாட்டுப் பற்றும் நாட்டின் ஆட்சியாளர்கள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையும்தான் அவளை இவ்வாறானதொரு தியாகத்தைச் செய்வதற்குத் தூண்டியிருக்கின்றன.

ஒரு மனிதன் தனது இனம், மொழி, சமூகம், தான் வாழும் பூமி, நாடு என்பவற்றின் மீது பற்றுக் கொள்வதை இஸ்லாம் விரும்புகிறது. மனிதர்களின் இயல்புகளுக்கு ஏற்பவே இஸ்லாத்தின் அனைத்துக் கடமைகளும் காரியங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தாம் பிறந்த மக்கா நகரத்தையும் இஸ்லாமிய சமூகத்தை உருவாக்கிய மதீனா நகரத்தையும் எப்போதும் நேசிப்பவர்களாக இருந்திருக்கிறார்கள். மக்காவை விட்டு மதீனாவிற்கு வெளியேறிச் சென்ற போது (ஹிஜ்ரத்) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவை நோக்கி,



''இந்த பூமியிலுள்ள அனைத்து ஊர்களிலும் நீதான் எனக்கு மிக விருப்பமான ஊராக இருக்கிறாய். நிச்சயமாக எனது சமூகத்தார் என்னை வெளியேற்றி இருக்காவிட்டால், நீ அல்லாத ஓர் ஊரில் நான் வசித்திருக் கமாட்டேன்'' எனக் (கவலையோடு) குறிப்பிட்டார்கள். (திர்மிதி)

மக்காவை விட்டு மதீனாவுக்கு வந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எப்போதும் தாம் பிறந்த தேசத்தைப் பற்றிய கவலையுடன் இருந்தார்கள். ஆனால், காலப் போக்கில் மதீனா மீதான அன்பு அவரது உள்ளத்தில் எழுந்தது. தமக்கு மதீனாவின் மீது பற்றை உண்டாக்குமாறு அல்லாஹ்விடத்தில் கீழ்வருமாறு பிரார்த்தனை புரிந்தார்கள். ''யா அல்லாஹ்! எனக்கு மக்காவின் மீது எவ்வாறு அன்பு இருக்கிறதோ அதே போன்று மதீனாவின் மீதும் உண்டாக்குவாயாக அல்லது அதைவிட அதிகமாக அன்பை உண்டு பண்ணுவாயாக'' (புகாரி)

மேலும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிலால் அல் ஹபஷி (ரழியல்லாஹு அன்ஹு), ஸல்மான் அல் பாரிசி (ரழியல்லாஹு அன்ஹு), சுஐப் அர்ரூமி (ரழியல்லாஹு அன்ஹு), ஹுதைபதுல் யமானி (ரழியல்லாஹு அன்ஹு) போன்ற பிற நாடுகளிலிருந்து இஸ்லாத்தில் இணைந்து கொண்ட நபித் தோழர்களை அவர்களது நாட்டின் பெயரோடு சேர்த்தே அழைத்து வந்திருப்பது தமது தோழர்கள் நாட்டின் மீது பற்றுடன் வாழ வேண்டும் என்று விரும்பியதைக் காட்டுகின்றதல்லவா?

அன்பின் மாணவர்களே, உண்மையான நாட்டுப் பற்று என்பது நாட்டின் வரைபடத்தையே, பூகோள அமைப்பையோ நேசிப்பது மட்டுமல்ல; அந்நாட்டு மக்களை நேசிப்பதையும் குறிக்கின்றது. நாட்டு மக்களின் நலன் கருதி அவர்களுக்குத் தன்னால் முடிந்த சேவைகளை உளப்பூர்வமாக செய்வது, அவர்களோடு இணக்கமாக வாழ்வது, அவர்களுக்காக உழைப்பது போன்றவை உண்மையான தேசப்பற்றின் அடையாளங்களாகும்.

நாட்டின் சுதந்திரம், பாதுகாப்பு, அபிவிருத்தி, கல்வி, ஆரோக்கியம், சகவாழ்வு போன்றவற்றின் வளர்ச்சிக்குத் தன்னலம் கருதாது உழைப்பது அவசியமாகும். நாடு ஆபத்துக்கோ, வறுமைக்கோ, பஞ்சத்துக்கோ, அநியாயத்துக்கோ உள்ளாகும்போது நாடு எதிர்கொள்ளும் சோதனையை விடுவிக்கப் பாடுபடுவதும் தேசப்பற்றின் அடையாளமாகும்.


தேசத்தின் நலனுக்காக இந்நாட்டு முஸ்லிம்கள் உழைத்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றில் காணலாம். நாட்டின் சுதந்திரத்திற்காக முஸ்லிம்கள் பாடுபட்டிருக்கிறார்கள். சிங்கள மன்னர்களுடன் இணைந்து நாட்டின் நலனுக்காக முஸ்லிம் மக்கள் சேவை செய்திருக்கிறார்கள். மந்திரி, பிரதானிகளாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் மருத்துவர்களாகவும் அரசமாளிகையில் சமையலாளர்களாகவும் செயற்பட்டு மன்னர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள வரலாற்று நிகழ்வுகள், வரலாற்று மூலாதாரங்கள் மற்றும் இலக்கிய மூலாதாரங்களில் பதிவாகியுள்ளன.

இன்றும் நம் நாட்டு முஸ்லிம்கள் தம்மால் முடிந்த வகையில் நாட்டின் நலனுக்காகச் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போட்ஸ்



**விரைவு - உயர்வு - துணிவு**


எம்.ஏ. ரியாஸ் மொஹமட் (B.A, PGDE)
கு/இப்/அல் ஹூதா மு.ம.வி, ரிதீகம

## ஆரோக்கியமான வாழ்விற்கு

உடல் அப்பியாசம் (பயிற்சி) என்பது ஆரோக்கியத்தையும் உடலுறுதியையும் பேணுவதற்கான உடற் செய்முறையாகும். உடற் பயிற்சியின்போது என்புகள், தசைகள் வலுப் பெறுவதோடு, குருதிச் சுற்றோட்டம், சுவாசம் மேம்படுகிறது. பல சந்தர்ப்பங்களில், நோயெதிர்ப்புத் தன்மை மேம்படுவதால் நோய் வராது தடுக்கப்படுகிறது. மேலும், பயிற்சியின்போது கவனம் முழுதும் பயிற்சியில் குவிக்கப்படுவதனால் மனவழுத்தம் போன்ற நிலைகளுக்கும் தீர்வாகின்றது. நோயுற்றவர் - நோயற்றவர் என்ற வேறுபாடில்லாது அனைவருக்கும் ஒழுங்கான அல்லது கிரமமான முறையில் உடற்பயிற்சி அவசியமாகும்.

சில நோய் நிலையுள்ளவர்களுக்கு தேகாப்பியாசம் கட்டாயம் வேண்டியிருக்கிறது. (உ+ம்: நீரிழிவு, உடற்பருமனடைந்தோர், நித்திரையின்மை, மனவழுத்தம்) போன்றன. உடல் எடையையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். பல விதமான உடற்பயிற்சிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தனது உடலின் தன்மைக்கும் அப்பியாச தேவைக்கும் (உ+ம்: விளையாட்டு வீரர், உடற்கட்டு வளர்ப்போர்), வயதிற்கும் ஏற்ப அப்பியாசங்களை தெரிவு செய்ய வேண்டும். அப்பியாசம் செய்யும் கதியும் நேரமும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

யோக அப்பியாசத்தையும் ஒருவர் தெரிவு செய்யலாம். அளவுக்கும் அல்லது தேவைக்கும் மேலாக உடற்பயிற்சி செய்வது உடலிற்கு தீங்காக அமையலாம். உடற்பயிற்சியின் பின்பு உடலிற்கு ஓய்வு (மீள் கட்டமைப்பிற்காக) தேவைப்படுகின்றது. போதிய ளவு ஓய்வு கிடைக்காத பொழுது, பாவித்தழிக்கப்பட்ட போஷாக்கு கூறுகள் மீளக் கிடைக்காத பொழுது உடல் நோய் நிலைகள் தோன்றுவதற்கு இடமளிக்கிறது.



தொகுப்பு: ஷைமா மர்யம்
அறக்கியால-கெகுணகொல்ல

## உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகள்

| | | வருடம் | இறுதிப்போட்டி மைதானம் - இடம் | நடைபெற்ற நடைபெறவுள்ள நாடு | வெற்றி பெற்ற நாடு |
|---|---|---|---|---|---|
| 01 | புரூடென்ஷல் | 1975 | லோர்ட்ஸ் - லண்டன் | இங்கிலாந்து | மே.இ.தீவுகள் |
| 02 | புரூடென்ஷல் | 1979 | லோர்ட்ஸ் - லண்டன் | இங்கிலாந்து | மே.இ.தீவுகள் |
| 03 | புரூடென்ஷல் | 1983 | லோர்ட்ஸ் - லண்டன் | இங்கிலாந்து | இந்தியா |
| 04 | றிலையன்ஸ் | 1987 | ஈடன் கார்டின்ஸ் - கொல்கத்தா | இந்தியா - பாகிஸ்தான் | அவுஸ்திரேலியா |
| 05 | | 1992 | MGG - மெல்போர்ன் | அவுஸ்திரேலியா நியூசிலாந்து | பாகிஸ்தான் |
| 06 | ஐ.சி.சி | 1996 | கடாபி அரங்கு - லாகூர் | இந்தியா-பாகிஸ்தான்-இலங்கை | இலங்கை |
| 07 | ஐ.சி.சி | 1999 | லோர்ட்ஸ் - லண்டன் | இங்கிலாந்து | அவுஸ்திரேலியா |
| 08 | ஐ.சி.சி | 2003 | Wanderers - ஜொகனஸ் போர்க் | தென்ஆபிரிக்கா | அவுஸ்திரேலியா |
| 09 | ஐ.சி.சி | 2007 | ஓவல் - பிரிட்ஜ் டவுண் | மே.இ.தீவுகள் | அவுஸ்திரேலியா |
| 10 | ஐ.சி.சி | 2011 | Wankhede - மும்பை | இலங்கை-இந்தியா-பங்களாதேஷ் | இந்தியா |
| 11 | ஐ.சி.சி | 2015 | மெல்போர்ன் மைதானம் | அவுஸ்திரேலியா-நியூசிலாந்து | அவுஸ்திரேலியா |
| 12 | ஐ.சி.சி | 2019 | ....................... | இங்கிலாந்து | .................. |
| 13 | ஐ.சி.சி | 2023 | ....................... | இந்தியா | .................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் வரலாற்றில் பெண்கள்

1908 இங்கிலாந்தில் நடைபெற்ற நான்காவது ஒலிம் பிக் போட்டியிலேயே முதன் முதலில் பெண்கள் விளையாட அனுமதிக்கப்பட்டனர்.

1900 ஆம் ஆண்டு சார்லஸ் கூப்பர் என்ற பெண் வீராங்கனையே ஒலிம்பிக்கில் டென்னிஸ் விளை யாட்டில் தங்கப் பதக்கம் பெற்ற முதல் பெண்ணா னார்.

1948 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று ஒலிம்பிக்கில் முதல் தங்கம் வென்ற ஆபிரிக்க - அமெ ரிக்க கறுப்பின பெண் என்ற பெருமையை அலீஸ் கோச்மான (Alice Coachman) பெற்றுக் கொண்டார்.

1952 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் போலியோ நோயினால் செயலிழந்த முழங்கால் குறைபாட்டு டன் ஒரு பெண் ஆண்களுடன் போட்டியிட்டு வெள் ளிப் பதக்கம் வென்றார். அவர்தான் லிஸ் காரட்டல் (Lis Hartel) என்ற டென்மார்க் ஈக்குவெஸ்ட்டிரியன் (equestrian) என்ற குதிரையேற்ற வீராங்கனையா வார். அந்நாட்களில் இவ்விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான பிரிவு இருக்கவில்லை. ஆனால், பிரத்தியேகமாக தன்னை இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்த பெண்மணியின் விண்ணப் பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போட்டியில் விளை யாடிய ஆண்களுடன் இவரை போட்டியிட அனு மதியளிக்கப்பட்டது. இப்போட்டியின் இறுதிக் கட் டத்தில் இவர் குதிரையிலிருந்து கீழே தவறி வீழ்ந்த தால் தங்கப் பதக்கத்தை தவறவிட நேர்ந்தது. ஆனா லும், இவர் ஒருவர்தான் ஒலிம்பிக் வரலாற்றில் ஒலிம் பிக்கின் பதக்க மேடையை ஆண் விளையாட்டு வீரர் களுடன் பங்கிட்ட ஒரே ஒரு பெண்மணியாவார்.

மெச்சிகோ நாட்டில் 1968 ஆம் ஆண்டு ஒலிம் பிக் வரலாற்றில் முதன் முதலாக நோரமா என்ரிக்கு வெட்டா பாஸ்சிலியோ என்ற மெச்சிகோ நாட்டுப் பெண் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றினார்.

முதன் முதலாக 1984 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில்தான் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி சேர்க்கப்பட்டது. இப்போட்டியில் தங்கப் பதக்கத்தை அமெரிக்காவைச் சேர்ந்த ஜொவான் பெனொய்ட் என்ற பெண் பெற்றதன் மூலம் ஒலிம் பிக்கின் முதல் மரதன் வீராங்கனை என்ற பெருமை யைப் பெற்றார்.

## 2015 ஆம் ஆண்டிற்கான தங்கப் பந்து விருதை

## லியொனல் மெஸி பெற்றார்



கால்பந்தாட்ட உலகின் உயரிய விருதாக கருதப் படும் தங்கப் பந்து விருதை பார்சிலோனா அணி யின் நட்சத்திர வீரர் லியொனல் மெஸி 5 ஆவது முறையாக வென்றுள்ளார். இதன் மூலம் இவ்வி ருதை 5 முறை வென்றுள்ள வீரராக மெஸி பதிவா கியுள்ளார். இந்த விருதுக்கான இறுதிப் பட்டியலில் பார்சிலோனாவின் லியொனல் மெஸி (ஆர்ஜென் டினா), ரியல்மெட்ரிட்டின் ரொனால்டோ (போர்த் துக்கல்) பார்சிலோனாவின் மற்றொரு வீரர் நெய்மர் (பிரேசில்) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். விருதுக் குரிய வீரரை கால்பந்து பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு செய்தியாளர்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்தனர். இதில் பார்சிலோனா மெஸி 41.33 சதவீத வாக்குகளைப் பெற்று விருதை வென் றார். ரொனால்டோவுக்கு 27.76 சதவீத வாக்குகளும் நெய்மருக்கு 7.86 சதவீத வாக்குகளும் கிடைத்துள் ளன. மெஸி கடந்த வருடத்தில் 61 போட்டிகளில் 52 கோல்களை அடித்துள்ளார். அத்துடன், 28 கோல்கள் அடிக்க காரணமாகவும் இருந்துள்ளார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

## விளையாட்டுப் போட்டிகளின்போது

### மருத்துவ அறிக்கை கட்டாயமானதாகும்

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங் கேற்கும் சகல வீரர்களுக்குமான மருத்துவ அறிக்கை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதனை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இதற் கான அனுமதியை வழங்கியுள்ளன. பாடசாலை விளை யாட்டு வீரர்களின் சீரான உடல் நலத்தை உறுதிப்ப டுத்துவதற்காக ஆயிரம் அரச மருத்துவர்களுக்கு பயிற் சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் நாடளாவிய ரீதியாகவுள்ள மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்



## விழி நீரால்
### ஒரு விம்பம்

இனம் புரியா வலிகள் மட்டும்
வரிகளாய் வடிகின்றன
விழிகள் கூட மறுக்கின்றன
விழி நீரை நிறுத்த...

காலம் கடந்து போனது...
கனவுகளும் மங்கிப் போனது...
உறவுகளும் விலகிப் போனது...
வலிகள் மட்டும் தொடர்கின்றன...

வாய் மொழிந்து பேச
பாஷைகள் இல்லாது
மழலையைப் போல்
படம் வரைகின்றேன்
என் விழிகளால்...

பாதங்கள் இல்லாது
பாதையைத் தேடுகின்றேன்...

பர்ஹானா பின்த் நௌபர்
சுமையா மகளிர் அரபுக் கல்லூரி
கிண்ணியா - 04

## வாழ்க்கை

வேஷமாய் பாசம் காட்டி
நெஞ்சத்தை அள்ளிக் கொண்டு
எங்கோ தொலைந்து போகும்
நண்பர்கள்...

இதயக் கூட்டை இடிக்குமளவு சோகங்கள்
சுற்றிலும்
இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும்
பச்சோந்திகளாய் சொந்தங்கள்

தவணை முறையில்
வலி தரும் பிரிவுகள்
அவ்வப்போது
அலைமோதும் அவமானங்கள்

ஈடில்லாத் தோல்விகள்
ஆங்காங்கே வெற்றிகள்
ஆங்காங்கே சந்தோஷங்கள்

இவற்றின் பொதுப் பெயர்தான்
சொல்கின்றார்கள் வாழ்க்கை என்று!

எம்.ஆர். ஆயிஷா
குரு/ஹிஸ்புல்லாஹ் ம.க.
தெலியாகொன

## தாய்மை தந்த
## தன்னம்பிக்கை



வாழ்வெனும் வழியிலே
வலி சுமந்த வரிகளால்
வாய்ப்புக்களுக்காய் ஏங்கி
வாழ்ந்த ஜீவனுக்கு...

பேனைக்கு விரல்போல் நீ
வந்தாய் அன்பியே
என் உணர்வுகளோடு
கலந்து உறவாய்

பாதங்கள் இல்லாது
பாதைகளைத் தேடும்
பாமரனாய் நானிருக்க

மேகங்களில் உறங்கவும்
மனம் ஒன்று போதும் என
உணர்த்திய உறவே!

என் உணர்வோடும்
உயிரோடும் கலந்த
இந்த உறவு...

தாமரைகளில் பதிந்த
பனித்துளி அல்ல
அன்பியே!
அது என் தாய்மை தந்த
தன்னம்பிக்கை!

அஸ்மா பின்த் முஹய்யதீன்
இறக்குவானை
இரத்தினபுரி

## பேசும் கவிதை - இல 10



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப் பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிர சுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த பத்து கவிதைகளுக்கு பரிசாக பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**2016 பெப்ரவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### என் வாழ்வு
பாசத்தையும் நேசத்தையும்
சிந்தித்தேன்
வெற்றியையும் தோல்வியையும்
சந்தித்தேன்
உயர்வையும் தாழ்வையும்
நிந்தித்தேன்
எனினும் பரந்திருக்கும்
அல்லாஹ்வின்
அருட்களை சிந்திக்க
மறந்து விட்டேன்...

**ஏ.எப். ஹஸ்னா**
**கல்முனைக்குடி**
**ஆலங்குடா**

## பரிசுக்குரிய ஏனைய கவிதைகள்

### துடிப்பு
துடிப்புள்ள சிறுவனே
உனக்கென்ன சிந்தனை?
மனிதநேயம் அற்றுப்போயுள்ள
யுகத்தில்
மனிதநேயத்தை மீட்டெடுக்க
உன் மனம் துடிக்கிறதோ?

**ஸைனப் பின்த் நஸீர்**
**கே/நூராணியா மு.ம.வி.**
**உயன்வத்த**

### வெற்றி கிட்டும்
முயற்சி செய்
வாழ்க்கையில் உயர்வாய்
வாழ்வின் உயரங்களை
ஆழமாய் நம்பு
நிச்சயம் நாளைய
புது விடியல்
உனக்காய் விரியும்...

**எஸ், எப். சுஜா**
**கு/அல் ஹிக்மா மு.ம.வி**
**தித்தவெல்கால**

### உன்னால் முடியும்
தளராத உள்ளத்துடன்
மறுமையை எண்ணி வாழ்ந்திடு
நாளை என்பது இல்லை
இன்றே முயற்சி செய்
ஈருலகமும் வெற்றியாய்
அமையும் உனக்கு

**ஜீமானா**
**நிக/அபுகாகம மு.ம.வி**
**நிகவெரடிய**

### நீ பெறுவாய்
தோல்வியைக் கண்டு
வாடாமல்
வாழ்வை வெறுத்து
ஒதுக்காமல்
நின்றிட வேண்டும் நீ
உணர்வாய்
நலவையே பெறுவாய்
நாளைய மண்ணில்

**முஹம்மத் அம்ஹர்**
**நிக/அபுகாகம மு.ம.வி**
**நிகவெரடிய**

### மானிடா
மானிடா..
இந்த நவீன உலகம்
ஓர ஊமையான மாயை
அதற்காய் நீ உன்னை
தொலைத்து கொண்டிருக்கிறாய்..
உன் வாழ்வின்
உண்மையை சிந்தி
அப்போது புரியும்
வாழ்வின்
வெற்றி

**எம்.ஆர்.எப். அஸ்மிரா**
**ஸாஹிரா கல்லூரி**
**மாவனல்லை**

### எதிர்காலம் உனக்காய்
உன் சீரிய சிந்தனைகளை
சிறகடித்து பறக்கவிடு
நாளைய விடியலில்
நீ சாதிப்பதற்காய்
சரித்திரம் படைப்பதற்காய்
காலம் உனக்காய்
காத்து நிற்கிறது

**என். எப். அம்ரா**
**க/இக்ரா மு.ம.வி**
**உலப்பனை**

### என் சிந்தனை
தேவைப்பட்டதும்
தேவை எல்லாம்
தேவையற்றதாகிப் போனது
மீண்டும் தேவையான போது
தேவையானது எல்லாம்
தொலைந்து போனது

**நப்லா சஸ்னா**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி**
**கள்-எலிய**

### மனிதா...
நீ
இன்று சிந்திப்பதால்
நாளை புதிய
அனுபவங்களுடன்
வாழ்வை துவங்குவாய்

**ஸாறிக் அமீன்**
**இர்பானியா வளாகம்**
**கெகுணகொல்ல**

### நீ சாதிப்பாய்
ஒரு நொடியேனும்
தாமதம் செய்யாதே
வெளிச்சத்தை நோக்கி
விரைந்து நட
தன்னம்பிக்கையினை
கையிலேந்து
நாளை நீ
வெற்றியாளனாய்
சாதனை படைப்பாய்

**பாத்திமா ஸஹ்ரா ஸாஹிர்**
**திஹாரிய**

### சிந்தனை
நான் வெற்றிகளை
சந்தித்து
பொறுமையாய்
இருக்கவும்
தோல்வியை சந்தித்து
துவண்டுபோகாமல்
இருக்கவும்
ஒவ்வொரு
நொடியும் சிந்திக்கின்றேன்

**எம்.எம். ஸறீனா பானு**
**க/பதியுதீன் மகளிர் கல்லூரி**
**கண்டி**

### நீ...
கடந்தவை
கழிந்தவை
முடிந்தவை
முறிந்தவை பற்றி
சிந்திப்பதை விட்டு
நடப்பவை பற்றி
சிந்தி...

**எம்.எச். கைரா**
**தெல்தோட்டை**

### சிந்தி
வாழ்க்கையின்
ஒவ்வொரு
பொழுதையும்
சிந்தி
சிகரம் வரை
நீ உயர்வாய்
உன் நாமம் உயரும்

**றிபாயா எம். முஸ்தபா**
**காத்தான்குடி 03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழ் தொடர்...

3. சுவாசத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புகள்

- ❖ புகைக்காதவர்களுடன் ஒப்பிடும்போது புகைப் பவர்களுக்கு நுரையீரல் புற்று நோய் ஏற்படுவ தற்கு 10 மடங்கு வாய்ப்புக் காணப்படுகிறது.
- ❖ நுரையீரலானது Alveoli எனும் காற்றுக் குமிழி களைக் கொண்டு காணப்படுகிறது. புகைத்தலா னது இந்தக் குமிழிகளை உடைத்துவிடுகின்றது. இதனால் எம்பிசீமா எனும் நோய் ஏற்படுகிறது. இது ஏற்பட்ட ஒருவருக்கு சுவாசிப்பது மிகக் கடி னமாக மாறிவிடுகிறது. சில சந்தர்ப்பங்களில் சுவாசத் தொழிற்பாடு குறைவடையும். தவிர சுவாசப் பாதையில் எரிவு ஏற்படுவதுடன் சுவா சப் பாதையில் புற்று நோய் ஏற்பட வாய்ப்பா கவும் அமைகிறது.

  மேலும் நுரையீரல் தொற்று நோய்கள், சுவாசப் புற்றுநோய், நாட்பட்ட சுவாச அடைப்பு நோய் மற்றும் ஆஸ்துமா போன்ற நோய்களும் ஏற்படு கிறது.

4. சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புகள்

- ❖ வெற்றிலை மெல்பவர்களைப் போல் புகைப்ப வர்களுக்கும் வாய்ப்புற்று ஏற்படுதற்கான சந்தர்ப் பம் அதிகமாகக் காணப்படுகிறது.
- ❖ தொண்டைப் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.
- ❖ புகைக்காதவர்களைவிட புகைப்பவர்களுக்கு கேஸ்ட்ரைட்டீஸ் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கிறது.
- ❖ நாளடைவில் அல்சர், குடல், இரைப்பை, சதைப் புற்று நோய் மற்றும் நாடி வெடிப்பு போன்ற வையும் ஏற்படும். அல்சரினால் இரத்தப்போக்கு அதிகரித்து இறுதியில் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.
- ❖ முரசு மற்றும் நாக்கில் எரிவு ஏற்படுவதோடு, இரத்தம் கசியும் நிலையும் புகைப்பவர்களில் காணப்படுகிறது.

5. சிறுநீர்த் தொகுதியில் ஏற்படும் பாதிப்புகள்

- ❖ சிறுநீரகப் புற்றுநோய், சிறு நீர்ப்பை புற்று நோய் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்பு புகைப்பவர் களில் பொதுவாகக் காணப்படுகிறது.
- ❖ புகைப்பழக்கம் உள்ள ஆண்களில் சுக்கிலப்பா யச் சுரப்பிகளிலும் புற்று நோய் விருத்தியாவதற் கான வாய்ப்புள்ளது.

6. பாலுறுப்புக்களோடு தொடர்பான பிரச்சினைகள்

- ❖ ஆண்களின் விந்துக் கலங்களில் குறைகள் ஏற்ப டும். உதாரணமாக, விந்துக்கலங்களில் காணப்ப டும் உயிரணுக்களின் எண்ணிக்கை குறைவது டன் அதன் தரமும் குறைவடையும். இதனால் குழந்தைப்பேறு இல்லாமல் போகும் அல்லது பிறக்கும் குழந்தை ஊனமாகவோ அல்லது இரு தய நோய்களுடனோ பிறக்கலாம்.
- ❖ பொதுவாக புகைக்கும் ஆண்களுக்கு பாலியல் விருப்பம் குன்றும். ஆணுறுப்பு விறைக்கும் தன்மை குறையும். இதனால் கணவன் மனைவிக்கிடை யில் பிளவுகள் தோன்றலாம்.


*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology (Peradeniya)


# போதையும் மாணவர்களின் பாதையும்...?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❖ ஒருவர் புகைத்துவிட்டு வெளியில் விடும் புகையை மற்றவர் சுவாசிப்பதால் அவருக்கும் மேற்சொன்ன பிரச்சினைகள் ஏற்படும் அபாயமுண்டு. கருவில் குழந்தை இருக்கும்போது ஒரு தாய் இவ்வாறு சுவாசிப்பாரெனின் கருவில் இருக்கும் அக்குழந்தைக்கும் பாதிப்புக்கள் ஏற்படும். இதன்காரணமாக ஊனமுற்ற குழந்தைகள் பிறக்கலாம், கற்றல் குறைபாடுடைய பிள்ளை பிறக்கலாம்.

7. ஏனைய பாதிப்புகள்

❖ எலும்பின் உறுதி குறைந்து வலுவிழத்தல். இதனால் எலும்பு முறிவு ஏற்படும் அபாயம் தோன்றும்.

❖ இரத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், இரத்தப்புற்று நோய் ஏற்படும். இதனால் விரைவாக நோய்வாய்ப்படும் தன்மை உண்டாகும். கால்கள் வலுவிழந்து குருதிச் சுற்றோட்டம் குறைந்து கால் பகுதியில் காயம் ஏற்படல்.

**02. பொருளாதார ரீதியான பிரச்சினைகள்**

❖ தற்போது ஒரு சிகரட்டின் விலை 30 ரூபாவாகக் காணப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு நபர் 3 சிகரட்டுக்களைப் புகைத்தால் 90 ரூபாய் செலவாகும். ஒரு மாதத்துக்கு 2700 ரூபாவும் ஒரு வருடத்துக்கு 32400 ரூபாவும் செலவாகும். ஒரு நாளைக்கு 3 சிகரட் வீதம் இந்தத் தொகை என்றால் இதை விட அதிகமாகப் பாவிப்பவர்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தொகையைச் சேமிப்பிலிட்டால் பிற்காலத்தில் பிரயோசனமாக அமையும் அல்லது நல்ல பழங்கள், சத்தான உணவுகளைச் சாப்பிட்டால் உடலாரோக்கியமாக வாழலாம் அல்லது படிப்புக்காகச் சேமிக்கலாம் அல்லது இல்லாதவர்களுக்குத் தர்மம் செய்து நன்மையை அதிகரிப்பதன் மூலம் சுவனம் செல்லலாம்.

❖ புகைப்பதால் மாரடைப்பு, பக்கவாதம் அல்லது சுவாச நோய்கள் ஏற்பட்டால் அவற்றைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாது. ஓரளவு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம். அதற்கான மருந்துவச் செலவுகள், உணவு மற்றும் ஏனைய செலவுகள் பாரியதொரு சுமையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**03. சமூக ரீதியான பிரச்சினைகள்**

❖ சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்படும் நிலை தோன்றும். புகைத்தல் என்பது ஓர் ஒழுங்கீனமான செயல் என்பதால் நல்ல மனிதர்களுடன் பழகும் வாய்ப்புகள் அற்றுப் போகும். நல்ல நண்பர்கள் கிடைக்க மாட்டார்கள். திருமணமாகாத ஆண்களுக்கு பெண்ணும் பெண்களுக்கு ஆணும் கிடைப்பது மிக கஷ்டமாகி திருமணம் செய்ய கஷ்டமான நிலை ஏற்படும். நல்ல கணவன் அல்லது மனைவி கிடைப்பது ரெம்பக் கஷ்டமாக இருக்கும். தவிர திருமணமான தம்பதிகளுக்கிடையில் சண்டைகள் ஏற்படலாம். கணவனின் வாயிலிருந்து வரும் சிகரட் துர்நாற்றம் சுகமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையும்.


❖ புகைக்கும் ஒருவர் ஜமாஅத்தாக நின்று வணங்க இயலாமல் போகும். வரிசையில் நிற்கும்போது துர்வாடை வீசுவதை ஏனையவர்கள் அருவருப்பாக நோக்குவர். இது புகைப்பவருக்குச் சங்கடத்தை ஏற்படுத்துவதால் அவரால் கூட்டாகத் தொழ முடியாமல் போகும்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

1. 

i. தகவல், விளம்பரம், பொழுதுபோக்கு
ii. பொழுதுபோக்கு, தொடர்பாடல், செய்தி
iii. களியாட்டம், செய்தி, சமயம்

2. 

i. ஒற்றுமை, அழகு, சுத்தம்
ii. சுத்தம், ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு
iii. ஐக்கியம், அழகு, சுத்தம்

மிக நெருங்கிய உருச்சோடியை தெரிக.

3. நரம்புக் கருவி வயலின் எனின், காற்றுக் கருவி எது?
i. கித்தார் ii. தவில்
iii. புல்லாங்குழல்

4. 75 ஆண்டு முடிவில் கொண்டாடப்படும் விழா எது?
i. பொன் விழா ii. பவள விழா
iii. அமுத விழா

5. ஒரே நேரத்தில் 100 விடயங்களை அவதானிப்பவர்?
i. அட்டாவதானி ii. தசாவதானி
iii. சதாவதானி

6. சுபியான் பாடசாலைக்கு வழமையாக வருவது ..............லாகும்.
வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல் எது?
i. பேருந்தி ii. பேறுந்தி iii. பேரூந்தி

7. 1969 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாவது தசாப்தமாகும்?
i. 20 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்தம்
ii. 19 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்தம்
iii. 20 ஆம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தம்

8. ராணி மாலையில் கடற்கரையை நோக்கி செல்லும்போது அவளது நிழல் அவளது வலது கைப் பக்கம் தோன்றியது எனின், ராணி சென்ற திசை யாது?
i. மேற்கு ii. தெற்கு iii. வடக்கு

A என்பவரும் B என்பவரும் ஒரே அளவான வருமான வரியை செலுத்துகின்றனர். C என்பவர் B யிலும் கூடுதலாகவும் D யிலும் குறைவாகவும் வரி செலுத்துகின்றனர்.

9. மிகக் கூடிய தொகையை வரியாகச் செலுத்தியவர் யார்?

10.

| | | |
|---|---|---|
| 25 | 15 | A |
| 10 | 5 | 30 |
| 15 | 25 | 5 |

i. 5 ii. 10 iii. 15


11. வரிசையொன்றில் விமல் 9 ஆவதாக நிற்கின்றான். அவனுக்குப் பின்னால் 5 பேர் நிற்கின்றனர் எனின், வரிசையிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை?
i. 15 ii. 14 iii. 13

12. பிற்பகல் 1.30 மணியை நியம நேரத்தில் எழுதினால்?
i. 01.30 மணி ii. பி.ப. 13.30 மணி
iii. 13.30 மணி

13. கிரிக்கட் சுற்றுப் போட்டியொன்றில் 10 அணிகள் தமக்கிடையில் மோதிக் கொண்டன எனின், முதல் சுற்றில் நடைபெற்ற மொத்த போட்டிகள் எத்தனை?
i. 90 ii. 45 iii. 56

14. 836 அப்பியாச கொப்பிகளை ஒருவருக்கு 4 வீதம் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?
i. 29 ii. 209 iii. 109

15. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?



i. 2/7
ii. 2/8
iii. 6/8

16. ஒரு பக்கத்தில் சம இடைவெளியில் 10 தூண்களையுடைய சதுர வடிவக் காணியொன்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிக் காணப்படும் மொத்த தூண்களின் எண்ணிக்கை யாது?

i. 36 ii. 32 iii. 40

17. இரண்டு வாரங்களும் ஐந்து நாட்களிலும் உள்ள மொத்த நாட்கள் எத்தனை?

i. 14 நாட்கள் ii. 12 நாட்கள்
iii. 19 நாட்கள்

18, 19 ஆகிய வினாக்களில் உள்ள எண்கோலங்களைப் பூர்த்தி செய்க.

18. [3] [5] → (41) [5] [6] → (61) [7] [8] → (?)

i. 81 ii. 113 iii. 100

19. (6) (7) [29] (4) (5) [11] (8) (4) [?]

i. 20 ii. 15 iii. 24

20. 10 இலிருந்து 100 வரையான எண்களை எழுதும்போது கிடைக்கும் பூச்சியங்களின் எண்ணிக்கை யாது?

i. 10 ii. 11 iii. 12

21. எமது பாடசாலையிலுள்ள மாணவர்கள் அனைவரும் தொப்பி அணிந்துள்ளனர். கமலா தொப்பியணிந்துள்ளாள் எனின், ''கமலா எமது பாடசாலை மாணவியாவாள்'' இக்கூற்று

i. சரியானது ii. பிழையானது
iii. கூற முடியாது

21. 8 நண்பர்கள் தமக்கிடையில் கைகுலுக்கிக் கொண்டனர் எனின், அங்கு இடம்பெற்ற மொத்த கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?

i. 28 ii. 56 iii. 30

□ - △ 16 எனவும் □ + △ 32 எனவும் தரப்பட்டுள்ளது.

22. □ இற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

i. 24 ii. 8 iii. 32

23. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. □ + △ + △

i. 40 ii. 32 iii. 24

24. ஆடு - கடா என்பதுபோல குதிரைக்கு

i. ஏறு ii. கடுவன்
iii. குண்டு

25. ''காணாமற்போன மகனைக் கண்ட தாய் முகம் மலர்ந்தாள்'' என்பதில், முகம் மலர்ந்தாள் என்ற மரபுத்தொடர் உணர்த்துவது?

i. சிரித்தாள் ii. மகிழ்ந்தாள்
iii. துக்கப்பட்டாள்

26. ஓட்டப் போட்டியொன்றை சனா 9 நிமிடங்களில் ஓடி முடித்தாள். அதே போட்டியைக் கமலா 8 நிமிடங்கள் 15 செக்கன்களில் ஓடி முடித்தாள் எனின், இருவருக்கிடையிலான நேர வித்தியாசம் எவ்வளவு?

i. 15 செக்கன்கள் ii. 30 செக்கன்கள்
iii. 45 செக்கன்கள்

27. 2 l 800 ml பாலை சம அளவுகளில் 4 போத்தல்களில் ஊற்றினால் ஒரு போத்தல் கொள்ளும் பாலின் அளவு யாது?

i. 400 ml ii. 700 ml iii. 500 ml

28. 24 x □ = 72 எனின் வெற்றிடத்துக்கு பொருத்தமான எண் யாது?

i. 4 ii 3 iii. 6

29. இரண்டு பேனா வாங்கும் பணத்துக்கு 1 அப்பியாசக் கொப்பி வாங்கலாம். 2 அப்பியாசக் கொப்பி வாங்கும் பணத்துக்கு 1 பென்சில் பெட்டி வாங்கலாம். ஆகவே, 1 பென்சில் பெட்டி வாங்கும் பணத்துக்கு எத்தனை பேனா வாங்கலாம்?

i. 4 ii. 2 iii. 8

30. நகரம் ஒன்றில் எல்லா இடங்களிலும் ஒரே விலையில் விற்கப்படாதது?

i. டீசல் ii. பெற்றோல் iii. மீன்

31. ஓர் ஒழுங்கு முறையில் இல்லாததன் கீழ் கோடிடுக.

i. 5, 10, 15, 20, 30, 35

ii. ii, iv, vi, viii, x

iii. A, B, C, D, E, F

32. இட்லி, உணவு, பிட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்ட பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் உணவைக் குறிப்பதற்குப் பொருத்தமான ஆங்கில எழுத்தாக அமைவது எது?

i. A ii. B iii. C

33. வாசுகி தான் பாடசாலைக்குச் செல்லும்போது 1000 ரூபாய் தாள் ஒன்றைக் கண்டெடுத்து அதனை உடனே அதிபரிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். பிறகு அதிபர் அதனை உரியவரிடம் ஒப்படைத்தார். வாசுகியை குறிப்பிடப் பொருத்தமான கூற்று?

i. நேர்மையானவள்

ii. நேர்மையற்றவள்

iii. கெட்டிக்காரி

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் ||



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**01.** பின்வரும் பந்தியை வாசித்து *1* தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கான விடைகளை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

நன்றி மறந்தவரை உலகம் 'நன்றி கெட்டவர்' எனக் கூறிவிடும் எனப் பயந்து வாழ்ந்தவர் சிலர் உளர். அவர்கள் நன்றி மறந்தவர்களாக தாம் ஆகிவிடக் கூடாது என்பதற்காக அநீதியின் பக்கம் சாய்ந்தவர்களானார்கள். கர்ணன் அத்தகையவர்களுள் ஒருவன். பாண்டவர் தம் தம்பியார் என அறிந்த பின்னரும் அவர்கள் பக்கம் சேரவில்லை. தம் நண்பனான துரியோதனன் செய்த உதவிக்காக செய்ந்நன்றி மறவாத வீரனானான்.

1. நன்றி மறந்தவர்களை உலகம் எவ்வாறு அழைக்கும்?
2. படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.
3. 'நீதியின்' என்பதன் எதிர்ச்சொல் யாது?
4. 'ஒருத்தி' என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
5. தோழன் என்ற கருத்தைத் தரும் சொல் எது?
6. பந்தியில் நன்றிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் யார்?

**02.** சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.

1. தீவாலி, தீவாளி, தீபாவலி, தீபாவளி
2. இங்கனம், இக்கணம், இங்கணம், இங்ஙனம்

**03.** பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
2. ஆழமறியாமல் காலை விடாதே

**04.** பின்வரும் சொற்களிலுள்ள உயிர்க்குறிகளை இனங்கண்டு அதன் கீழ் கோடிடுக.

1. 'மைதானம்' என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க் குறிகளாவன?

   *(சங்கிலிக் கொம்பு, விசிறியும் சுழியும், அரவு, சங்கிலிக் கொம்பும் அரவும்)*

2. 'அப்பா வந்தாரா?' என்ற சொல்லிலுள்ள நிறுத்தற்குறி எது?

   *(வியப்புக்குறி, வினாக்குறி, முற்றுப்புள்ளி, காற்புள்ளி)*

**05.** பின்வரும் இணைமொழிகளின் கருத்துக்களை எழுதுக.

1. அங்குமிங்கும்
2. கண்ணும் கருத்தும்

**06.** பின்வருவனவற்றின் கருத்துக்களை தமிழில் எழுதுக.

1. Village : ..........................................
2. Pawpaw : ..........................................
3. Crow : ..........................................

**07.** பின்வருவனவற்றின் கருத்தைத் தரும் ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1. தபாற்காரன் : ..........................................
2. விரல்கள் : ..........................................
3. வேலி : ..........................................

**08.** பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. அர (G) கஹ ல்ங்(G)க
2. (B) பித்தரய(க்)க மில கீய(dh)த

**09.** *1* தொடக்கம் 28 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. ஆன்மிகச் செயற்பாடுகளைச் சரிவரச் செய்யாமையினால் ஏற்படும் தீமைகளில் ஒன்று?

   i. கற்றலில் ஆர்வம் குன்றும்
   ii. உடல் அழகு பெறும்
   iii. கற்றலில் ஆர்வம் ஏற்படும்
   iv. நோய்களிலிருந்து பாதுகாத்தல்

2. வீட்டினுள் தானாகவே வாழ்வன எவை?

   i. நாய், பல்லி ii. கரப்பான், பூனை
   iii. எலி, எறும்பு iv. எலி, ஆடு

3. விசேடமான வாழிடங்களை அமைத்து வாழும் பிராணிகள் எவை?

   i. ஓநாய், பூனை
   ii. மரை, தவளை
   iii. தூக்கணாங்குருவி, தேனீ
   iv. தவளை, மரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தண்டுக் கோதிப்புழுவினால் தாக்கப்படும் தாவ ரம் எது?

i. நெல் ii. மிளகாய்
iii. பயறு iv. குரக்கன்

5. கால்களற்ற பிராணிகளுள் ஒன்று அல்லாதது எது?

i. நத்தை ii. மரவட்டை
iii. அட்டை iv. மண்புழு

6. இலங்கை பற்றிய தரவுகளுள் பொருந்தாதது எது?

i. ஆசியா கண்டத்தில் அமைந்துள்ளது.
ii. இந்து சமுத்திரத்தின் மத்தியில் உள்ளது.
iii. உலகிலேயே மிகவும் பெரிய நாடாகும்.
iv. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டதாகும்.

7. தேசப்படத்தில் சிறு வீதிகளைக் குறிக்க பயன்ப டுத்தப்படும் நிறம் எது?

i. சிவப்பு ii. கறுப்பு
iii. மஞ்சள் iv. கபிலம்

8. ஜின்கங்கை கடலுடன் கலக்குமிடம் எது?

i. காலி ii. மாத்தறை
iii. அம்பாந்தோட்டை iv. களுத்துறை

9. இலங்கையில் உள்ள அழகான நீர்வீழச்சிகளில் ஒன்று?

i. பம்பரகந்த ii. தியலும
iii. பேர்கர்ஸ் iv. அபர்பீன்



10. கோள்களில் மிகச் சிறியது எது?


i. புதன் ii. சனி
iii. வியாழன் iv. வெள்ளி

11. தரமான பொருள் பற்றிய சிந்தனைகளுள் ஒன்று?

i. முட்டையை நீரில் இடும்போது மிதத்தல்.
ii. மீனின் பூ நிறம் மாறி இருத்தல்.
iii. பாணில் பூஞ்சணம் பிடித்திருத்தல்.
iv. வெண்டிக்காயின் நுனியை முறிக்கும்போது முறிதல்.

12. வீட்டுச் சமையலறையில் பயன்படுத்தப்படும் உபகரணங்களில் திருகைக் கல்லைக் குறிப்பிடு வது யாது?

i.  ii. 

iii.  iv. 

13. பருவகால பயணச் சீட்டை வழங்குகின்ற நிறு வனம் எது?

i. இலங்கை மின்சார சபை
ii. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
iii. இலங்கை போக்குவரத்துச் சபை
iv. பொலிஸ் நிலையம்

14. மூன்று இதழ்களையுடைய பூக்களில் ஒன்று எது?

i. பாகல் ii. அலரி
iii. தென்னை iv. ரோஜா

15. நீரையும் கனியுப்பையும் தாவரத்திற்கு பெற்றுக் கொடுக்கும் பகுதி யாது?

i. வேர் ii. இலை
iii. தண்டு iv. அரும்பு

16. தொலைத்தொடர்பு சேவையைக் குறிப்பிடும் சின்னம் என்ன?

i. Sri Lanka Telecom ii.

iii. CDB iv. இ.போ.ச S.L.T.B

17. தரப்பட்டுள்ள திரவங்களில் அடர்த்தி கூடிய திரவம்.

i. மதுசாரம் ii. பெற்றோல்
iii. நீர் iv. தேங்காய் எண்ணெய்

18. வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு கிடைக்கக் கூடிய சேதனப் பசளையாக அமையாதது எது?

i. மாட்டெரு ii. யூரியா
iii. கோழியெச்சம் iv. பசுந்தாற் பசளை

19. பின்வருவனவற்றுள் நச்சுத்தன்மையற்றது எது?

i. வண்ணாத்துப்பூச்சி ii. பாம்பு
iii. தேள் iv. சிலந்தி

20. ஊதா நிறம் உருவாக சேர்க்க வேண்டிய நிறங் கள் எவை?

i. மஞ்சள், நீலம்
ii. நீலம், சிவப்பு
iii. மஞ்சள், சிவப்பு
iv. நீலம், சிவப்பு, மஞ்சள்

21. இக்கருவி குறிக்கும் வாத்திய வகை எது?

i. நரம்புக்கருவி ii. தோற்கருவி
iii. காற்றுக்கருவி iv. கஞ்சக்கருவி

22. உள்ளக விளையாட்டில் அடங்காதது எது?

i. கரம் ii. சதுரங்கம்
iii. ஹொக்கி iv. மேசைப்பந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சுவட்டு நிகழ்ச்சிகளில் அடங்குவது எது?

i. தடை தாண்டல் ii. தட்டெறிதல்
iii. நீளம் பாய்தல் iv. ஈட்டி எறிதல்

24. திரிபீடகத்தை புனித நூலாகக் கொண்ட சமயம் எது?

i. இந்து சமயம் ii. இஸ்லாம்
iii. கிறிஸ்தவ சமயம் iv. பௌத்த சமயம்

25. இரை கொடுத்து இரை பிடிக்கும் முறைகளில் ஒன்று எது?

i. கரப்பு ii. அத்தாங்கு
iii. தூண்டில் iv. வீச்சு வலை

26. வளியை நிரப்பக் கூடிய ஒரு பொருள் அல்லாதது எது?

i. பலூன் ii. பந்து
iii. சாக்கு iv. பொலித்தீன்

27. சந்தையொன்றில் ISBN முத்திரை எதில் காணப் படுகிறது?

i. தேயிலை ii. பற்பசை
iii. புத்தகம் iv. சீனி

28. இக்குறியீடு குறிப்பது?

i. இலங்கை மின்சார சபை
ii. ஸ்ரீ லங்கா டெலிகொம்
iii. இலங்கை போக்குவரத்து சபை
iv. தபால் நிலையம்

29. இக்குறியீடு குறிப்பது?

i. இலங்கை மின்சார சபை
ii. ஸ்ரீ லங்கா டெலிகொம்
iii. இலங்கை போக்குவரத்து சபை
iv. தபால் நிலையம்

30. உலகின் மிக நீளமான நதி எது?

i. மகாவலி கங்கை ii. களனி கங்கை
iii. மிசிசிப்பி நதி iv. நைல் நதி

**விடைகள்**

01. 1. நன்றி கெட்டவர் 2. அவர்கள்
3. அநீதியின் 4. ஒருத்தன்
5. நண்பன் 6. கர்ணன்

02. 1. தீபாவளி 2. இங்ஙனம்

03. 1. மன திருப்தி
2. எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்

04. 1. சங்கிலிக் கொம்பும் அரவும்
2. வினாக்குறி

05. 1. அந்த பக்கமும் இந்த பக்கமும்
2. மிக கவனமாக

06. 1. கிராமம் 2. பப்பாசி
3. காகம்

07. 1. Postman 2. Finger
3. Fence

08. 1. அந்த மரத்திற்கருகில்
2. ஒரு முட்டையின் விலை எவ்வளவு?

09.

| | |
|---|---|
| 1. i | 17. iii |
| 2. iii | 18. ii |
| 3. iii | 19. i |
| 4. i | 20. ii |
| 5. ii | 21. iii |
| 6. iii | 22. iii |
| 7. iii | 23. i |
| 8. i | 24. iv |
| 9. ii | 25. iii |
| 10. i | 26. iii |
| 11. iv | 27. iii |
| 12. iv | 28. i |
| 13. iii | 29. iii |
| 14. iii | 30. iv |
| 15. i | |
| 16. i | |

**41 ஆம் பக்கத் தொடர்...**

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. ii | 8. iii | 17. iii | 26. ii |
| 2. ii | 9. ii | 18. ii | 27. iii |
| 3. iii | 10. ii | 19. i | 28. ii |
| 4. ii | 11. ii | 20. ii | 29. ii |
| 5. iii | 12. iii | 21. iii | 30. i |
| 6. i | 13. i | 22. i | 31. iii |
| 7. iii | 14. ii | 23. i | 32. i |
| | 15. iii | 24. i | 33. iii |
| | 16. ii | 25. iii | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 07

## தலைப்பு: ஆற்றங்கரை

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



எம்.ஐ.எப். இல்மா
கு/அல்ஹுதா மு.ம.வி.
ரமுக்கந்தன, ரிதீகம



எம்.ஏ. ஸாஹிரா
வேப்பமடு மு.ம.வி.
புத்தளம்



நுஸ்கா ஜவாஹிர்
அல் முஃமினாத் அ.க.
அக்குரணை


### பாராட்டை பெறும் சித்திரங்கள்




எம்.எம். முபீதா
கு/அன்நூர் மத்திய கல்லூரி
பாணகமுவ



எம்.ஐ. ஹாலா
க/ஸாஹிரா கல்லூரி
கம்பளை



அலாவுத்தீன் பாத்திமா அகீலா
மா/அரபா மு.ம.வி.
மாதிபொல



எப். நிஹ்லா
க/ஹைன்பொட் மாபாகந்த மு.வி
கண்டி



எம்.ஆர்.எம். ஷவ்வாப்
புத்தளம்



எம்.ஏ. ஸஹ்னா
வேப்பமடு மு.ம.வி.
புத்தளம்



எம்.ஐ. பாத்திமா
ஸாஹிரா கல்லூரி
கம்பளை




எம்.ஆர்.எப். ஸாஜிதா
க/தெல்தெனிய மு.வி.
ரஜவல்ல



ஆயிஷா ஸல்மா
அல் முஃமினாத் அ.க.
அக்குரணை



எம்.ஆர். ஹலீமா
க/தெல்தெனிய மு.வி.
ரஜவல்ல



அஷ்ரா யாகூப்
அல் முஃமினாத் அ.க.
அக்குரணை



எம்.ஐ.எப். இஸ்ரா
பதுரியா ம.க.
மாவனல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org